உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.



| ஆண்டு க | தாது—ஆனி ஆடி 1936—ஜூலை ஆகஸ்ட்டு | திங்கள் கக, கஉ. |
|---|---|---|



உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## நேசம்.

உலகினுள்ள மக்கட்குச்சிறப்பு நேசமே. இந்த நேசம், காதலரிடத்தும், பெற்றோரிடத்தும், குழந்தைகளிடத்தும், நண்பர் உறவினரிடத்தும் நிகழ்தல் இயல்பு. பாசசம்பந்திகளானநட்புறவினர்கள், கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலியவற்றிற் சிறந்தவர்களாக விருப்பின், அவர்களின் நேசமானது சிறந்த பலனைத் தந்து ஊக்குவிக்கும் என்பதும், கல்லாமாந்தராய், மடமைமிக்குடையாராய், கயவராயிருப்பின் அவர்களின் நேசமானது தீமையை விளைவித்து ஆக்கம் சிதைவிக்கு மென்பதும் உலகானுபவத்தால் உணரலாம்.

பிசிராந்தையார் நரை திரை மூப்பின்றி இளநலந் தோன்ற விருந்த காரணங் கூறுமுகத்தான்,

“யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளைஞரும் வேந்தனு
மல்லவை செய்யான் காக்கும் அதன்றலை
யான்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யாம் வாழு மூரே” என்றனர்.

இதன் பிண்டப்பொருளாவது:—எற்கு ஆண்டுகள் பலகழிந்த வாயினும் நரையின்றி இளம்பிராயத்துடன் காணப்பெறுவதெவ்வாற்றாலோ வெனக் கேட்பீரேல் மாட்சி மிக்க என் இல்லக்கிழத்தியும் மக்களும் அறிவின் மிக்காராய்விளங்குகின்றனர். என் துணைவர்களும் என்குறிப்பின்வழித்தானவர்களாயிருக்கின்றனர். அரசனும்நீதிக்கு மாறான செயலைப் புரியான்; நெறிமுறை புரிந்து காக்கின்றான். நல்ல நூல்களையாய்ந்து அறிந்து அடக்கமுடையாராகிய அறிவாளிகள் பலரைக் கொண்டது யான் வாழும் ஊர் என்பதாம்.

நரை மூப்புக்குறுகாமைக்குக்காரணம் நான்நேசித்துள்ள மனைவி மக்கள் அறிவாளிகள். நட்பினர் கருத்திற்கிசைந்தவர்கள். அரசன் நீதிமான். ஊரவர் அடக்கமுடைமையைக்கைக்கொண்டவர்கள் என அறிவினரைச் சேர்ந்தொழுகுந் தன்மையால் மனதிற்கு இன்பமேயூறி உள்ளங்குளிர்ந்து உடல்குளிர்ந்து மிளிர்கின்றதெனப் பெறப்படுகின்றது. ஆதலின், அறிவுடையார் நேசம் பெரிதும் சிறந்ததே. இங்ஙனம் அறிவுடையார் நேசம் அதிகரிக்கவே தீயன வொரீஇ நல்லன கைவரப்பெறும். பெறவே, அடியாருறவும் அரன்பால் பத்தியும் சித்திக்கும். சித்திக்கவே, நித்தியமான பேரின்ப சுகம் பெறுதற்கு நித்திய மங்கள மூர்த்தியாகிய சிவபரம் பொருளை நேசித்தலேயாமென்னும் நல்லறிவுண்டாகும். உண்டாகவே, அடியார் பெருமை, ஆண்டான் பெருமையாகியவைகளை யறியுந் திறனடையலாம். அங்ஙனம் ஆராயுமிடத்து "அடியாருறவும் அரன் பூசை நேசமும் அன்புமன்றிப் படிமீது வேறு பயனுளதோ" "நல்லாரிணக்கமும் நின்பூஜை நேசமும் ஞானமுமேயல்லாது வேறு நிலையுளதோ" என்பனவாதிய சுவானுபூதிமான்களின் திருவாக்குகளெல்லாம் மனத்திற் பதியும். பதியவே, பாசபந்தங்களெல்லாம் தூங்கினவன் கைப்பாக்கேபோல நழுவும். நழுவவே, "ஆரிருந்தென் ஆர்போயென் ஆருழுதாம் நின்னருளின் சீரிருந்தாலுய்வேன் சிவமே பராபரமே" என்ற சித்தாந்தச் செல்வராம் தாயுமானாரின் திருவாக்கும், "ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம் பாழுக்கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே........" என்பனவாதிய திருவாசகங்களும் உய்விக்கும்.

ஆகலின், நேசமானது தொடக்கத்தில் பாச உறவினர்பாலும், அப்பால் அறிவுடைப்பெரியார்பாலும், அப்பால் அடியார்பாலும், அடியார்களின் இணைமலர்த் துணைகொண்டு அரன்பாலும் செல்லுதலே முறைமையாம்.

மக்கள் யாக்கையைப் பெற்ற ஒவ்வொருவரும் தக்கவின்னதகாதனவின்னவென்றுபகுத்துணரும் பான்மையுடையராதல் அறிவாளிகளின் கூட்டுறவினாலேயேயாம். அறிவாளிகள் கூட்டத்தைச் சார்ந்து அறிவு நூல்களை யுணர்ந்து சீவான்மாவுக்கும் பரமான்மா

வுக்கும் உள்ள அணுக்கத் தன்மையை யுணர்ந்து அவநேச மொழித்துத் தவநேசம் பூண்டு சிவநேசராய்த் திகழ்தல் வேண்டும்.

சிவநேசத்தால் சீர்பெறலாமென்பதைச் சிறப்பாகக்கொண்டு சிவத்தை நேசித்து வருதலினாற்றான் இப்புதினத்தாளுக்கு 'சிவநேசன்' என்னும் சிறப்புப் பெயர் சித்தித்தது. உய்வகையருளும் சைவநெறியினையும், தமிழ்மொழியினையும் உவகைமிக்கூற உலகினர்க்குணர்த்தும் பெரு விருப்புடைய நம் 'சிவநேசன்' ஒன்பதாண்டுகளாகத் தனது கடமையைத் தளராதுளூற்றிவருகின்றா னென்பது வாசக நேசர்களும் உண்மையன்பர்களும் ஒருங்குணர்ந்ததே. நிலையிலா உலக வின்பத்தையே பெருக்கிச் செல்லும் பலவேறு புதினத்தாள்களைப் போலாது நிலைத்தான உலகாதீதப் பேரின்பத்தை யூட்டும் இச் 'சிவநேசனை' நேசிக்கும் மெய்யன்பர்களும் சிவநேசர்களாய்ச்சிவபரம்பொருளின் திருவருளுக்குப்பாத்திரர்களாய்த்திகழ்வார்களென்பது உறுதியே. ஆதலால், பெருமை சான்ற பெரியோர்களே! பேரன்பர்களே! பேரருளாளர்களே! இதுகாறும் இவனை யாதரித்தவாறே இனியும் ஆதரித்து சைவமுந் தமிழும் தழைக்கத் தக்க பேருதவிபுரிய வேண்டிக்கொள்கின்றேம்.

நற்பயிர் தழைய நல்லமழை எவ்வளவு இன்றியமையாமையோ அப்படியே நாடு செழித்தற்கு நாட்டுமொழியும் கடவுட்டன்மையை யுணர்த்தி மக்களை உய்விக்கும் சமய நெறியுமே சாலச் சிறந்ததென்பதை நல்லுணர்ச்சி யுள்ளாரெல்லாரும் நன்கறிவர். இச்சிவநேசனுக்கு வாழ்த்துக் கூறியும், மதிப்புரை வரைந்தும், மாற்றுப் பத்திரிகைகள், கட்டுரைகள், செய்திகள் தந்தும், அரிய நூல் வெளியீடுகளை யுதவியும் அருமையாக வரவேற்றுப் பெருமை பாராட்டியும், ஆண்டுத்தொகை, அதற்கென மூலதனம் நன்கொடையாதிய நல்கியும் ஆதரித்த பேரன்பர் பலர்க்கும் எல்லாம் வல்ல இறைவர் நல்லருள் பாலிப்பாராக.

சைவ சமயாச்சாரியர்களின் திவ்விய பொற்பாத கமலங்களை உறுதுணையாகக் கொண்டு சிவநேசன் பத்தாவதாண்டு தொடங்கிப் பண்டேபோல் என்றும் முறைபிறழாது உரியதொண்டாற்றுவான்; சைவத்தை மென்மேலும் போற்றுவான்; தமிழைப்பாராட்டுவான். சைவப் பெருமக்களே! தமிழ்ப்பெருமக்களே!! எந்நேரமும் சிவனை ஏத்துங்கள்! எழிலார் தமிழ் மொழி போற்றுங்கள். செம்பொன் மிகு செல்வர்களாகச் சிவநேசப்பெருஞ்செல்வர்களாகச்செந்தமிழ்ப் பெருஞ் செல்வர்களாகத் திருவருட் பெருஞ் செல்வர்களாக எந்நாளும் இன்புற்றிருக்கலாம்.

> வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
> கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
> நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
> மேன்மை கொள்சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

# அழகில் சிறந்தது.

குழந்தைகளுக்கு உடல்அழகு வாய்க்கினும் அல்லது வாய்க்காதுஒழியினும் அவைகள் கவர்ச்சி மிக உடையவைகளாய்விளங்குவதுவெளிப்படை. கட்டழகு இல்லையென்று யாரும் குழந்தைகளைப் புறக்கணிக்கின்றாரில்லை. அழகு உடலை ஒட்டியதன்று என்பதற்குச் சிசுக்களே சான்றாக இலங்குகின்றன. சரீர சௌந்தரியத்தைக் காட்டிலும் மனோசௌந்திரியமே சாலச் சிறந்தது. மனோசௌந்திரியம் குழந்தைகள் அனைத்துக்கும் பொதுவானது. அதனாலேதான் அவைகளின்பால் வசீகரணம் பொலிகிறது. துஷ்ட மிருகங்களும் வசப்பட்டவைகள்போல் சிசுக்களின் முன்னிலையில் ஒழுங்காக நடந்துகொள்கின்றன. கடவுள் அழகன் என்று சொல்லப்படுகிறார். அந்த மெய்யான அழகின் அம்சம் சிசுவின்மாட்டு மிளிர்கின்றமையால் அது மக்களது மனதைக் கொள்ளைகொண்டு போகிறது.

குழந்தைகளின் இயற்கை யழகைக் கண்டு களித்திராது ஆடையாபரணங்களைக்கொண்டு பெற்றோர் அவைகளுக்குச் செயற்கை யழகு பூட்டுவானேன்? குளிர் வெப்பம் இவைகளினின்று காத்தற் பொருட்டுத் தூய உடை யணிதலில் பொருள் உண்டு. மற்றுவெறும் செயற்கை யலங்காரம் பண்ணுதலெல்லாம் குழந்தைக்காக வன்று; பெற்றோரின் நிலையற்ற ஆசையைப் பூர்த்திபண்ணுதற் பொருட்டேயாம். அநாவசியமான ஆடை ஆபரணங்களால் விளையும் கேடுகள் பலவுள. நகைகளை இச்சித்துச் சிசுக்களைக் கொலை செய்பவர்களைப் பற்றி அடிக்கடி கேள்விப்படுகிறோம். நகையே சிசுவுக்கு நமனாய் உடலில் வந்து ஏறியது என்று இயம்புவது மிகையாகாது.

அலங்காரமான ஆடை ஆபரணங்களால் சிறுவர் மனதில் ஏற்படும் மாறுதல் மிக மிகக் கொடியது. தூயதாய் எல்லார்க்கும் இனியதாய் இருக்கும் பாலரது மனப்பான்மை வெளியாடம்பரத்தில் பற்றுடையதாய், சொகுசை விரும்புவதாய் பரிணமித்துவிடுகிறது. பின்பு மேலோர் என்ற வீம்பும் தொடர்ந்தே வருகிறது. பணிவால் மேன்மை யுறுவதுபோய் தற்பெருமையால் சிறுமையுற்றுச் சீர் அழிவது உறுதி. ஆடம்பர வாழ்வு என்றும் மனிதனுக்கு அணிகலம் ஆகாது. பெருமிதவாழ்வில் பற்றுடையானுக்கு ஈவு இரக்கம்முதலிய நற்குணங்கள் அமையா. தெய்வத்தன்மையுடன் பிறந்தவன் வகைகெட்டு வாழ்ந்து விலங்குத் தன்மையை எய்துவானேன்?

வாழ்வின் நோக்கம் உடலை அலங்கரிப்பதன்று. ஆக்கைக்கு அணிகள் பூட்டுவதாலேயே ஒருவன் மேலோன் ஆகான். இக்கூற்று விலங்குகளுக்கும் கூடப் பொருந்தும். தங்கக் கடிவாளமும் பட்டுச் சேணமும் (ஜீனியும்) தாங்குவதாலேயே குதிரை யொன்று பிறப்பில் உயர்ந்ததெனக் கருதப்படுகிறதில்லை. உயர் பிறப்புக்கேற்ற குணமும் லட்சணமும் அதன்பால் பொலிதல்வேண்டும். மானுடனோ அறிவிற்சிறந்தவன். அவனது பெருமைக்குப்பிறப்பிடம் அறிவு. உள்ளத்தைப்பண்படுத்தாது உடலத்தை அழகுபடுத்துவது பிறப்பின்பெருமையைப்பாழாக்குவதாகும். இயல்பாகஅமைந்துள்ள உள்ளத்தின் அழகை மேலும் ஓம்பாது ஊன்உடலத்தில் செயற்கை யழகை மனிதன் கொணர்ந்து திணிக்கிறான், என்னே! ஒருவனுக்கு அழியாப்புகழ் வருவது உடலை அலங்கரிப்பதால் அன்று; உள்ளத்தைப்பண்புடன் பேணுவதாலேயேயாம். தொட்டிற்பழக்கம் வாழ்வெல்லாம் தொடர்ந்து வருகின்றமையால் சிறுவர்களுக்குக் குணம் எனும் அழியாத அணிபூட்டிவளர்ப்பதே உத்தமம்.

—ரா. கி. வி.

# பதினோராந் திருமுறை.

## ஐயடிகள் காடவர்கோன் நாயனார் இயற்றிய

## சிவதல வெண்பா.

(சின்னகாஞ்சிபுரம் திரு, சேனபதி நடேச ரெட்டியாரவர்கள்.)

### முதற் பாவின் பொருள் விளக்கம்.

*ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றாரும்*
*கோடுகின்றார் மூப்பும் குறுகிற்று—நாடுகின்ற*
*நல்லச்சிற் றம்பலமே நண்ணாமுன் நன்னெஞ்சே!*
*தில்லைச்சிற் றம்பலமே சேர்.*

இச்செய்யுளில் பொருள் ஐயப்பாடுள்ளது. "நல்லச்சிற் றம் பலமே நண்ணாமுன்" என்ற தொடரில் ஆகும்.

இத்தொடரினுக்குப் பொருள் கண்டார் பலருடைய கொள்கைகளுள், திரிசிரபுரம் ஸ்ரீமான் சோடசாவதானம். சுப்பராய செட்டியார் அவர்கள் தாம் அச்சுவாகனம் ஏற்றுவித்த திருமுறைப் புத்தகத்தில் கண்ட உரையாவது:—நல்ல - சிறு - அம்பலம் - கரிய சிறிய பொதுஇடம். "நரகம்" என்கிறார். இதில் "நல்ல" என்ற தெலுங்கு மொழியைத் திசைச்சொல்லெனக்கொண்டு "கருமை" என்ற பொருளில் விளக்கியுள்ளார்கள்.

'சிவநேசன்' (யுவஹூ) 9-ம் ஆண்டு தை 6-ம் திங்கள் வெளியீட்டில் 133ம் பக்கத்தில் பன்னூல் பயின்று பயன்தேர் அறிஞராம் காஞ்சிபுரம் திருவாளர், வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்கள் ஷை தொடரின் பொருள் விளக்கத்தை மேற்கோளுடன் உதவியதாவது:—

"நல் - அச்சு - இற்று - அம்பலம் - நண்ணாமுன்" எனப் பிரித்துப் பொருள் கோடல் கவிக் கருத்தாகும் என்கிறார்கள். இப் பாவின் பொழிப்புரையாவது:—நல்ல நெஞ்சே! (உலகில் ஒருவரின்) நடக்கை நீங்குதலும், (இளமை நீங்கி மூப்பால் இல்லில் தங்குதலும்) (அவர் தம் நலத்தினை விரும்பி நின்ற) சுற்றத்தினரும் (அவரை) வெறுக்கின்றார்கள் (அவ்வெறுக்கும் வழக்கினை நீயும் அறிந்தனையன்றோ?) (ஆதலால் உனக்கு) மூப்புங் குறுகிற்று (நின்)

நல்ல உயிராகிய அச்சு ஒடிந்து (உடலாகிய பண்டி இல்லின் முன் திண்ணையாகிய) அம்பலத்தே சோராமுன் (நீ) தில்லைப்பதியின் திருச்சிற்றம்பலத்தே (எழுந்தருளியுள்ள ஆனந்தக் கூத்தரின் திருவடிகளை வாழ்த்துக. என்று உரைகண்டு தந்துள்ளார்கள்.

இதில், அம்பலம் - தெருத்திண்ணை என்றும் மூப்படைந்தால் வெறுக்கின்றார்கள் என்றும், நின் நல்ல உயிர் ஒடிந்தது என்ற பொருள் விளக்கி அச்சு என்பதற்கு உயிர் என்ற பொருள் தர சிந்தாமணிச் செய்யுள் உரையை மேற்கோள் காட்டியும் உள்ளார்கள். அதாவது 2621/23. "புது அச்சு" "பண்டி அச்சு இரு முன்னே" என்பதன் உரையாகும். ஈண்டு "உழுந்தாலும் புது அச்சு ஒன்று இட்டு ஊர்தல் தேற்றாது இழந்தார் பலர்" என்பதில் உழுந்த அச்சு, ஊர்தலை உடைய அச்சு தேற்றாது இழந்தார் அச்சு. என்று அமைத்து உழுத்தலும் ஊர்தலும், உருவம் உள்ள ஒன்றின் செய்கையும், தோற்றமும் ஆகும். ஆதலால், புதிய அச்சு என்றது-ஒரு புதிய உடல் என்றே பொருள் கோடலும் சிறந்தது. பண்டியாகிய அச்சு என்றதில் உயிர்தான் இயங்குதற்கு உரியதலம் உடலமாகும். மக்கள் பண்டியை வாகனமாக்கொண்டு ஊர்தல்போல் உயிரும் உடலை ஓர் ஊர்தியாக்கொண்டு ஊர்தலையுடையது. The body is the sead of the life or the station of the soul. So taken in its transmigratory progess asper its part actions.

பழவினைப் பயனால் தோன்றும் உடலுள் அழிவில்லாத உயிர் தன் பழய உணர்வினால் அவ்வுடலை இயங்க வைக்கும். உயிர் என்றும் அழிவில்லாதது. உடல் ஜடப் பொருளாகும். Soul is immortal.

இனி எம் சிற்றறிவினுக்கு விளங்கிய ஓர் உரையை விளக்குவாம். "நல்லச்சிற் றம்பலமே நண்ணுமுன்" என்ற தொடரை நல்-அச்சு - இற்று - அம்பு - அலம் - நண்ணுமுன் - எ." என்று பிரித்து, அமைத்து நல்வினைப் பயனால் வந்த புண்ணிய உடலின் வலிமை கெட்டு, சிலேற்பன நீரில் (சுக்கில சுரோணித மத நீரில்) அழுந்தி, அலமந்து, மெலிவு அடையா முன்னே" என்று பொருள் கோடல் சிறப்புடைத்தாகும்.

இவ்வெண்பாவின் அன்வயம்:—

உற்றாரும், மூப்பும் நாடுகின்ற நல்ல அச்சு இற்று (வலி) குறுகிற்று. ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே (யாவரும்) கோடுகின்றார் (ஆதலால்) நல்ல நெஞ்சே! (அச்சுள்) அம்பு, அலம் நண்ணு முன்னே தில்லைச் சிற்றம்பலமே சேர்.........என்பது.

இதன் பொருள் விளக்கம்:—

நல்ல நெஞ்சே! நல்வினையே நாடியதால் புண்ணிய உடலுள் வாழும் நல்ல மனமே.

உற்றாரும் நாடுகின்ற நல்லஅச்சு (உடல்) - நீ உறையும் உடல் புண்ணியத்தால் தோன்றிப் புகழொடு வாழ்க்கையுற்று, சுற்றந் தழுவும் குணம் நிறைவால் உற்றாரும், உதவி பெற்றாரும் மற்று யாவரும் விரும்பும் உடலுள் நீ வாழ்க்கை யுற்றாய்.

உற்றார்க்குரியது உடல் என்பதை நாலடியாருள் 3, 10.

"சேக்கைமரன் ஒழியச் சேண்நீங்கு புள்போல
யாக்கை தமர்க்கு ஒழிய நீத்து"

என்ற முதுமொழிக் கொப்ப, ஒருபுள்தான் வாழும் கூண்டையும், கூண்டு தங்கும் மரத்தையும் விட்டு நீங்கிப்பிரிதல்போல் உயிர்தான் இயங்கும் உடலையும், உடல் உலாவிய இடத்தையும் விட்டு நீங்க உற்றார் போற்றும் உடலை அவர்களேபெறுவர். ஆனால் உயிர் இறைவன் திருவடிசாரும் என்ற பொருளாகும்.

மூப்பும் நாடுகின்ற நல்ல அச்சு (உடல்) மாதா உதரத்து ஈனயில் கிருமிச் செருவாக சுக்கில சுரோணித மத நீர்க்கலப்பால் சிறிய கருவாய்த் தோன்றி, தூல உருவாம் மனித உடலாக வளர்ந்து தோற்றம், சிறப்பு, ஈறு, மாப்பேர் ஊழி என்ற நிலைகள் எய்தும் உடலாதலால் மூப்பும் அடைவது திண்ணம்.

இக்கருத்தினை நாலடியாருள் 6, 2.

"நிலையாமை நோய் மூப்பு சாக்காடு என்றெண்ணித்
தலையாயர் தங்கருமம் செய்வார்"

என்ற முதுமொழிக்கொப்ப உடல்வளம் அறிந்த காடவர் கோனும் அரசப் பெருந் தகையார் தம் நெஞ்சினுக்கு நல்லறிவு புகட்டுகிறார்.

அச்சு (உடல்) இற்று (வலி) குறுகிற்று - இறைவனின் இயக்கத்தால், ஐம்பூதச் சேர்க்கையால் அமைந்த உடல் வன்மையுற்று, இரத்த ஓட்டத்தால் சஞ்சரிப்பும், உடல் வளர்ச்சியும், வண்மை, வன்மை, உணர்வு, ஆற்றல்கொண்டு பலநாள் உழந்த உழைப்பால் உடல் பிணிப்பு நெகிழ்தலும், தளர்ச்சியுற்று உடல் வலிமையும் கெட்டது.

ஓடுகின்ற நீர்மை கெடுதலுமே - (ஆகலால்) உடல் சஞ்சரித்தலும் இல்லாது போக, நீர்மை கெடுதலுமே - இளமையில் உற்ற நல்ல குணமும் மாறுதல் அடையவே, (யாவரும்) கோடுகின்றார் - அறிவாலும், உணர்ச்சியாலும், ஆற்றலாலும் பலருக்கும் பலவித உதவிகள் செய்திருத்தலால் உதவி பெற்றாரும், உற்றாரும், மற்றோரும் அம்மூப்படைந்த உடலைச் சூழ நின்று உயிர்க்கு உறும் உறுதிப் பயனை மொழியக் கூடிநிற்பர். (கோடு-திரள்-மக்கள் கூட்டம், பக்கம் - மருங்கடைதல்.)

அச்சுள் அம்பு நண்ணுமுன்னே - மதநீர்க்கலப்பால் வளர்ந்த உடலாதலால், உடல் வன்மை கெட, கோழை, சேஷ்மம், மூப்படைந்த காலத்தும், இறுதிக்காலத்தும், தங்குதல் இயல்பாதலால், அவ்வுடல் வாழைத் தண்டுபோல் தட்பம் கொள்ளா முன்னே, அச்சுள் அலம் நண்ணுமுன்னே - உடல் வன்மைக் குறைவால் உடல் பனிப்பும், அலமருதலும், அலம்பலும் அடையா முன்னே, தில்லைச்சிற்றம்பலமே சேர் - திருத்தில்லைச் சிவதலத்தில் அமர்ந்தருளும் திருவருள் மூர்த்தியின் ரஞ்சித நடனம் செய்யும் குஞ்சிதபாதங்களை நண்ணுவாயாக! முன்னுவாயாக!! பரவுவாயாக!!! என்று தன்நெஞ்சினுக்கு நல்லறிவு புகட்டிய நீதிவாக்கியமாகும்.

அம்புள் நண்ணுமுன்னே - என்பதை மாதா உதரத்து மதநீருள் சேர்ந்து, மறுபிறவி எழாதிருக்கத்தில்லை மூதூர் முதல்வனை முன்னுவாய், திருவடித் தாமரைகளைச் சேர்ந்து துதிப்பாயாக. என்றுங்கொள்ளலாம்.

இவ்விளக்கத்தால் "அச்சு" என்ற ஒருசொற்கு உடல் என்று பொருள் சொல்லுதலே சிறப்பு என்பது எமது துணிபாகும். இப்பொருள் பயக்கவே பெரியோர் பலர் தம் கருத்தைச் செய்யுள் அகத்து விளக்கியதையும், ஆனால் உரைதந்த பெரியோர்கள் வேறு பொருள் விளக்கியதையும் ஆராய்வாம்.

காமச் சுவையும், காவியச் சுவையும், நிறைந்து, ததும்ப, சிந்தாமணி என்னும் ஒருநூலை உதவிய திருத்தக்கதேவர்:—

முத்தியிலம்பகம் 2619/21

"கருந்தலைகள் வெண்டலைகள் கழியும் முன்னே
அருந்தவமும் தானமும் ஆற்றுமினே கண்டீர்"

என்ற செய்யுளில் இளமைப் பருவத்துத் தலையில் கறுத்த நீண்டு வளர்ந்த மயிர் முதுமையுற்ற காலத்து, அம்மயிர் வெண்மையுற்று

உதிர்ந்து விழுதலைக் கண்டவர்களே! அவ்வாறு மாறுதல் பெறு முன் (இளமையிலேயே) தன் பொருட்டுத் தவமும் பிறர் பொருட்டுத் தானமும் செய்து உயிர்க்கு உண்டாம் உய்வு காண்பீர்களாக. கழியுமுன் என்றது மயிர் தன் கால அளவு இருந்து உதிர்ந்து கழியுமுன் எனவும்,

நாலடி 2620/22

''உடற்றும் பிணித்தீ உடம்பின் உயிர்பெய்திட்டு
அடுத்து உணர்வுநெய்யாக ஆற்றல் துவையாகக்
குடித்து உண்ணும் கூற்றம் குடில்பிரியா முன்னே
கொடுத்து உண்மின் கண்டீர் குணம்புரிமின் கண்டீர்''

என்ற செய்யுளில்,

மாதா உதரத்துக்கருவாய்த்தோன்றிய உடலுள் உயிர் எனும் சோற்றைப் பெய்து, உடலை வருத்தும் பிணியே எரிக்கும் தீயாக, உணர்வே நெய்யாக, ஆற்றலே துவை (இறைச்சி)யாக அடுத்திட்டு (பாகம்செய்து, உடல்வளர்ச்சியுற்று) அவ்வுடலும் உயிர், உணர்வு, ஆற்றல் இவைகளின் கூட்டுறவால் வளர்ந்து, முதிர்ந்ததும், நெய் யாகிய உணர்வைக் குடித்து, துவையாகிய ஆற்றலை உயிராகிய கூற்றம் உண்டு (உடலுள் உணர்வும் ஆற்றலும்கெட) அவ்வுயிர் குடிலை (உடலை) விட்டு நீங்கிப் போகாமுன்னே பிறர்க்குக் கொடுத்து உண்ணுங்கள், நல்ல குணங்களைப் போற்றிப் புரியுங்கள் எனவும் உடல்மாறும் நிலையைக் கண்ட மாந்தர்களை விளித்து உடல் ஜடப் பொருள் என்றும், உயிரும், உணர்வும், ஆற்றலும் தங்குவதற்கு ஓர் கொள்கலனாகவும் உவமித்து விளக்கியுள்ளார்.

நாலடியார் 26-வது செய்யுளில், கூத்தன் - உயிர்

''தோல் பையுள் நின்று தொழில் அறச் செய்து ஊட்டும்
கூத்தன் புறப்பட்டக் கால்''

உயிர் உடலுள் தங்கி, பலவகைத் தொழில்களையும் முற்றுப்பெற மிகுதியாகச் செய்து, அதனால் அவ்வுடலுக்கு உணர்வும், ஆற்ற லும் கொடுத்து நடத்தும் என்பதால் உயிர் சித்துப் பொருளாக உடலை நடத்தும் என்பதாகும்.

சிந்தாமணி, முத்தியிலம்பகம். 2621/23.

உழந்தாலும் புத்தச்சு ஒன்று இட்டுஊர்தல் தேற்றுது
இழந்தார் பலரால் இடும்பைநீர் ஆற்றுள்
அழுந்து மால் அப்பண்டி அச்சு இறுமுன்னே
கொளும் சீலம் கூலியாக் கொண்டு ஊர்மின்பாகீர்.

இச் செய்யுளின் கருத்து:—

உணர்வும், ஆற்றலும், நிறைந்து ஊர்தி அன்ன உடலை நடத்தும் உயிர்க்கு ஒப்பான பாகர்களே! (Charisteer) நீங்கள் பெற்ற உடல் தொழில் பல செய்து பயிற்சியுற்றுப் பழகிப் பாழடைந்தால் வேறு ஒரு புதிய இளமையான அச்சுள் (உடலுள்) உணர்வும், ஆற்றலும், பயிற்சியும் கொண்ட நமது உயிரைப் புக வைத்து (பரகாயப்பிரவேசம் செய்து) கூடுவிட்டுக் கூடு பாய்ந்து வாழும் ஆற்றலைத் தேர்ந்து உணராது உடலில் புகுந்த உயிர் அவ்வுடல் இயங்கும் காலம் வரையில் அதைச் செலுத்தி இழந்தார் பலர் ஆவர். பலர் என்றதால் கூடுவிட்டுக் கூடுபாய்ந்து தாம் கொண்ட பழய உணர்வும், ஆற்றலும் பல காலம் விளங்க வாழும் சித்தர்கள் சிலர் உண்டு என்பதை அறிவிக்கின்றது.

இனி புதிய இளமையான உடல் ஒன்றுகொண்டு உய்வதற்கு உரிய ஆற்றல் இல்லாமையால் நுங்கள் உயிர் உடலில் வாழுங் காலத்தில் கருவினையால் தோன்றும் இடும்பையாகிய நீர்பாயும் ஆற்றைக் கடக்க முடியாது. இடும்பை நீருள் பண்டியாகிய அச்சு (உடல்) அழுந்தி இடர் உற்றுக் கெடுதல் உறுமுன்னே, பெறற்கு அரும் பேறுகப் பெற்ற உடலை விட்டு உயிர் பிரியாமுன்னர் நும் வாழ்க்கையின் பயனை (கூலியாக)நல்லொழுக்கத்தைக்கைக்கொண்டு வாழ முயலுங்கள் ......... என்றபடி, மேலும் நல்வினைப் பயனால் நீடுவாழ்தலும், தீவினைப் பயனால் உயிர் உடலுள் உள்ளவரையில் வாழ்தலும் இயல்பு என்பதனை,

சிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகம் 510/73.

ஆடகச் செம்பொன் கிண்ணத்து ஏந்திய அலங்கல் தெண்ணீர்
கூடகங் கொண்டவாழ் நாள்உலந்ததேல் கொல்லும் பவ்வத்து
ஊடகம் புக்குமுந்நீர் அழுந்தினும் உய்வர் நல்லார்
பாடகம் போலச் சூழ்ந்த பழவினைப் பயத்தின் என்றாள்.

இதன் அன்வயம்:—

(நல்வினைப்பயத்தால்) நல்லார் முந்நீர்ப்பவ்வத்து ஊடு அகம் புக்கு அழுந்தினும் உய்வர்;

ஆனல், நல்லார் (மகளிர்) பாடு (பக்கம்சூழ்) அகம்போல் சூழ்ந்த பழவினைப் பயத்தால் கூடகம் கொண்ட வாழ்நாள் உலந்ததேல் (பழயதீவினை) கொல்லும் கூடும்அழியும். எங்ஙனம் எனில் பொன் கிண்ணத்துள்ள தெண்ணீர் எனினும், காற்றினல் மறைதல்போல்

உடலுள் தங்கிய உணர்வாகிய வாழ்நாள் தீவினைப்பயனால் கெட உடல் கெடும் என்றும், உடல் தொறும் புகுந்து வாழ்ந்து இயங்குவது உயிர் என்பதைக் கல்லாடத்துள் 10வது செய்யுள்,

"உயிர் புகுஞ் சட்டகம் உழிதொறும் உழிதொறும்
பழவினை புகுந்த பாடகம் போல
முதிர் புயல் குளிறும் எழும் அலைபுக்க
கட்டுடைச் சூருடல் காமங்கொண்டு"

என்றதால் மகளிர் கார்காலில் அணியும் பாடகம் போக்கும் வரவும் உண்டானால் போலத் தோன்றிக் கிடந்தால் போல் உயிரைப் பழயவினை சூழவும் அவ்வினைகழிய பலஉடல்தொறும் புகும்உயிர் என்பதும் பெற்றும். இதனால் சட்டகமானஉடல் அழிதலும் உயிர் அழிவில்லாததும் அறியத்தகும்.

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

என்றதால் முக்கால நிகழ்ச்சியும் அறியும் மூதறிவு பெற்று, கலிப்பகை எறிந்த காடவர்கோன் நாயனார் நீடுவாழ இறைவன் மலர் சிலம்படி வாழ்த்தத் தன் நெஞ்சினுக்கு உறுதி பயக்கக் கூறிய மொழியாகும்.

பழய வினையால் பிறவி தோன்றுவதெனினும் அதில் நல்ல வினைப் பயத்தால் வாழுநாள் உலந்ததில்லையாயின் கடலுக்குநடுவே புக்கு அழுந்தியிருப்பினும் நீண்டநாள் பிழைத்திருப்பர். (நீருள் ஆமைபோன்ற வாயுபந்தனம் செய்வர் நல்லோர்) ஆனால் தீவினைப் பயத்தால் மாக்கள் நீருள் மூழ்கி நீடித்திராது வெளித்தோன்று தலேபோல் உடலுள் உயிரை அது இருத்தற்குரிய ஓர் கால அளவு போல் இருத்திக்கொல்லும். உயிரும், வினைப்பயனும் அழிவற்றதாகும்.

"அச்சு எல்லாம் ஒன்றாய் அதிலே இருவகையாய்"

என்ற அருணகிரி அந்தாதிச் செய்யுளின் கருத்துப்படி "இச்சித்த எல்லாம் பெற்று உடல்வளங்கொண்டு வாழும் ஒருவகையினரும், இல்லாமையால் வாய்புதைத்துக்கைகட்டித் தாழ்ந்து வாழும் ஒரு வகையினரும் என்றதால் "பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற மறை மொழியின்படி உயிர் தான் எடுத்து வாழும் உடல் ஒன்றெனினும் வாழ்க்கையால் இருவகையாதல் உடற்கே யல்லாது உயிர்க்கு இல்லையாதலால் அச்சு என்பது உடல் என்பதாயிற்று.

மேலும், நாலடியாரில் 48-வது செய்யுள்,

பண்டம் அறியார் படுசாந்தும் கோதையும்
கொண்டு பாராட்டுவார் கண்டிலர்கொல்—மண்டிப்
பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் குத்தும்
முடைச் சாகாடு அச்சு இற்றுழி. என்பது,

இதன் அன்வயம்:—

சப்ததாதுக்களாகிய) பண்டத்தால் படும்(உண்டாகும்) அச்சு
சாந்தும் கோதையும் கொண்டு பாராட்டும் அச்சு
முடையும் சாக்காடும் (உற்று) இற்று (அழிபும்) அச்சு
பெடைச் சேவல் வன்கழுகு பெயர்த்திட்டுக் குத்தும் அச்சு
(ஆதலால்) (இது) கண்டிலரே அறியார் (ஆவர்.)

ஈண்டு அச்சு (உடல்) என்பதை இறுதி தீவக அணியாக்கொள்க. இதன் பொருள் அமைப்பு இவ்வாறிருக்க, இதற்கு உரைகண்ட பெரியார் பண்டம் என்பதை பண்டி என்றும், சாக்காடு என்பதை சாகாடு, சாடு, சகடு, சகடம் என்றுகொண்டு வடமொழிச் சிதைவு என்றும், அச்சு-அக்ஷம் - சக்கரம் கோத்தமரம் என்றும் பொருள் விளக்கியுள்ளார்கள். பண்டி, அச்சு, மரம் முதலியவை இருந்தும் இயங்கும் சக்தி ஒன்று இல்லையேல் யாதாகும்? அந்த சக்திதான் உடலாகிய அச்சுதனை இயங்க வைக்கும் உயிராகும். இது சித்துப் பொருளாகும். ஆனால் அச்சு - உடல், ஜடப்பொருளும் அழியும் இறத்தது. உயிர் அழியாதது உருவம்அற்றது. Immortal, Soul.

சப்த தாதுக்களாவன:—

"குடரும் கொழுவும் குருதியும் என்பும்
தொடரு நரம்பொடு தோலும்—இடையிடையே
வைத்ததடியும் வழும்பும்........."

என இவை சேர்ந்து உடலாக உயிர் புகுந்து வாழும் ஓர் அகம் ஆகிறது.

வேறோர் வகையாக எழு பொருள்கள் சேர்ந்து உடல் ஆகிறது என்பது, அவை ஐம்பூதம், தட்பம், தபனம், என்று எழும் இவற்றை இயங்க வைக்கும் எட்டாவதான உயிர் என்ற இயமானனும் ஆக உணர்வுற்ற உடலாகிறது என்பதாகும். இதன் விளக்கம் விரித்தெழுதப் பெருகும் என அஞ்சிவிடுகிறோம்.

இம் முதற் பாவினுக்குப் பொருள் கண்டார் பலராகும். "அச்சு" எனப் பிரித்து உரைகண்டவர் ஒருவரேயாகும். அவர் அதற்கு உயிர் என்ற பொருள், நச்சினார்க்கினியர் தந்த உரைக் கருத்துப்படி கொண்டு விளக்கியுள்ளார்கள். ஆனால் அச்சு என்பது உடல் என்ற பொருளில்தான் கொள்ளவேண்டும் என்பது எமது துணிபாகும்.

ஐயடிகள் காடவர்கோன்நாயனார் என்பவர், கன்னி மதில்சூழ் காஞ்சிபுரத்தில் பல்லவர்தங் குல மரபில் தோன்றி பல மன்னர்களும், இருமொழியும் பயின்று பல்கலைதேர்ந்த பண்பினரும் பணி செய்ய, இப்பார் புகழ, அரசியற்றிய பெருந்தகையார் இறைவன் உறைதரும் தலங்கள்தோறும்சென்று ஒவ்வோர் வெண்பா செய்து பேறு பெற்றவர். அவர் பாடிய வெண்பாக்களில் 24 எஞ்சி நின்றவையாகும்.

இதனை தேவார சிவதல வெண்பா என ஒரு நூலியற்றிய திரு வெண்பாப்புலி தி. சு. வேலுசாமிப்பிள்ளை அவர்கள் தம் நூலகத்து

சிவதலங்க டோறுமே சென்றொவ்வோர் வெண்பா
நவமுறமுன் பாடி யருணல்ல—தவமுடைய
வையடிகள் காடவர்கோ னம்போ ருககிகரு
மையடிகள் காதலினுள் வாம்.

என்றதால் சிவதலங்கள்தோறும் பாடியவைகளில்,

ஐயடிகள் காடவர்கோ னன்போ டியற்றியருள்
செய்ய தனிக் கேத்திரவெண்பா—வையகத்தி
லொ திருப்பதன்னி நாதனருள் கொண்டுமுற்று
மேலா வியற்றினேன் யான்.

என்றதால் 24 வெண்பா இருந்ததைப் பூர்த்தி செய்தது.

சோழநன்னா டோர்நூற்றுத் தொண்ணூறு வன்கல்லொன்
றீழ மிரண்டு கொங் கேழ்பாண்டி—யேழுடனேழ்
தொன்னடுமே வேழொடொன்று தொண்டையெண்ணான் கொண்
றுன்னுதக்கைந் தோர்சிவன்வா ழூர். [துளுவொன்

என 274 வெண்பாக்களை இயற்றிய ஒரு நூல் சொல்நயம் பொருள் நயம் நிரம்ப எமது ஆருயிர் ஆசான் வெண்பாப்புலியார் அவர்களால் இயற்றப்பட்டுள்ளது. விலைக்குக் கிடைக்கும் 0-8-0 ஒரு பிரதி.

———

# வைகறைத் துயிலெழு.

(கீரைத்துக்கடவு, பிரம்மஸ்ரீ, K. P. சுப்பிரமணிய சிவாச்சாரியாரவர்கள்)

வைகறைத் துயிலெழு என்னும் சொற்பொருளை ஆராயுமிடத்து வடநூலின்கண் கூறியுள்ளவிடயங்களாவன:—(வைகறை) என்பது ப்ராம்மீ முகூர்த்தம் இது தூலம், சூக்குமம், காரணம் என மூவகைப்படும். விடியுமுன் ஏழரை நாழிகை-தூலம் ஐந்து நாழிகை சூக்குமம் மூன்றேமுக்கால் நாழிகை காரணம் எனப்படும். இந்தக் காலத்தில் மனிதர் எழுந்திருக்கல்வேண்டும். எழுந்திரா விடில்? பித்தம் அதிகரித்து மூளையின் கலக்கத்தால் புத்திகுறையும் தேஜஸ் ஆயுள் இவை குறையும். வியாதியுண்டாகும். சோம்பல், நித்திரை, ஒரு காரியத்திலும் பிரவர்த்திக்க விடாது. வசிக்கும் கிரகம் ஸ்மசானத்திற்குச் சமம்.

ஆகையால் வைகறையி லெழுந்து வடதிசை நோக்கிச் சென்று உத்தமமான இடத்தில் இயன்றவரையில் சரீர சுத்தி செய்து வடதிசை நோக்கி உட்கார்ந்து விபூதி உத்தூளனம் செய்து சிரசுக்கு மேல் பன்னிரண்டங்குலத்தில் அஞ்சலி பந்தனம் செய்து அழிவற்றவராய் பிரணவாத்மகராய் நித்தியராய் அசைவற்றவராய் நிர்மலராய் சாந்தராய் இருதய கமலத்தில் வசிப்பவராயுள்ள பரமேஸ்வரரைத் தியானித்தல் வேண்டும்.

போக மோக்ஷங்களை விரும்பிய மனிதனுக்கு ஜாக்கிரம் ஸ்வப்பனம் ஸுஷுப்தி துரீயம் துரீயாதீதம் என்னும் ஐந்து அவத்தைகள் உண்டு. ப்ராத: காலம் மத்தியானம், சாயான்னம், அர்த்தஜாமம், பூதராத்திரி, மகாநிசி என்ற ஆறு காலம். இதில் முதல் நான்கு காலத்திலும் ஜாக்கிராவத்தையும் பூதராத்திரியில் ஸ்வப்பனம் சுழுத்தி இரண்டும் மகாநிசியில் துரியம் துரியாதீதம் இரண்டும் அநுபவித்து மகாநிசியின் முடிவில் எழுந்திருத்தல்வேண்டும். இந்தக் காலத்தில் மனிதனது லலாடத்தானத்தில் ஞானேந்திரியம் ஐந்து கர்மேந்திரியம் ஐந்து தன்மாத்திரை ஐந்து வாயுக்கள் பத்து ஞானேந்திரிய விடயம் ஐந்து மனம் புத்தி சித்தம் அஹங்காரம் ஆத்மா என முப்பத்தைந்து அவஸ்தைகளையும் அநுபவிக்கும் காலம் ஜாக்கிராவத்தை

ரின் காலமாகும். இது அறுபது நாழிகையுள்ள ஒரு தினத்தில் நாற்பத்தைந்து நாழிகை இருக்கும் அதன்பின் ஸ்வப்பனம்மூன்றே முக்கால் நாழிகையும் சுழுத்தி மூன்றே முக்கால் நாழிகையும் துரியம் மூன்றேமுக்கால் நாழிகையுந் துரியாதீதம் மூன்றே முக்கால் நாழிகையுமாகப் பதினைந்து நாழிகைதான் தூக்கத்தின் நேரமாகும்.

ஜாக்கிராவஸ்தையின் காலமாகிய நாற்பத்தைந்து நாழிகையை எட்டுமுகூர்த்தங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. அவைசூரியஉதயத் திற்கு முன் ஐந்து நாழிகைப்ரம்மீ முகூர்த்தம் உதயம் முதல் ஐந்து நாழிகைவரை ப்ரம்ம முகூர்த்தம் இதற்குமேல் ஏழரைநாழிகைவரை வைணவி முகூர்த்தம் இதற்குமேல் ஏழரை நாழிகை வரை விஷ்ணு முகூர்த்தம் இதற்கு மேல் ஐந்து நாழிகை ரௌத்ரி முகூர்த்தம் இதற்குமேல் ஐந்துநாழிகை ருத்ர முகூர்த்தம் இதற்குமேல் ஐந்து நாழிகை மகேஸ்வரி முகூர்த்தம் இதற்குமேல் ஐந்து நாழிகை மகேஸ்வர முகூர்த்தம் இவ்விதம் நாற்பத்தைந்து நாழிகை மனிதனது ஜாக்கிராவஸ்தையின் காலமாகும். மற்றை நான்கவஸ்தைகளையும் பூசுராத்திரி மகாநிசி என்னும் காலத்தில் அனுபவித்து ஜாக்கிராவஸ்தை தொடங்கும் நேரம் வைகறை. இவ்வைந்து அவஸ்தைகளினின்றும் ஆன்மாக்களை உய்வித் தருள்புரியும் பரமன் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந் தொழில் புரிவராகையால் மேற்கண்டப்ராம்மீ வைஷ்ணவி ரௌத்ரி மகேஸ்வரி என்னும் நான்கு காலத்திலும் சந்தியாவந்தன மூலமாய் பரமேஸ்வரரைத் தியானித்து ஒவ்வொரு காலமும் சிவபூஜையும் புரிதல் வேண்டும். இவை சிவார்ச்சனை தீபிகை என்னும் கிரந்தத்தில் 67 சுலோகத்தினுடைய உண்மைக் கருத்து.

குறிப்பு:— இக்காலத்தில் அறிவுரை விரிக்க வெளிவந்த சிலர் நூலாராய்ச்சி வழுவறச் செய்யும் ஊக்கமேற் கொள்ளாது மேனாட்டு நாகரீகம் புக்கு காலத்திற்குற்றதோர் கோலங் காட்டி ஸ்வயநலம் பிறர்நலம் சோர்வறச்செய்கின்றனர். இவற்றைச் சீர்படக்கருதி நேர்படவொழுகின் தாமும் பிறரும் நற்பதமுற்று மெய்ப்பதமடைவர்.

——

உ

# மங்கணகர் சரிதம்.

* ஸ்ரீ உ.-வே.-T. V. ஸ்ரீநிவாஸாசார்யரவர்கள் மொழிபெயர்த்த சல்ய பர்வம் 59-வது அத்தியாயத் திரட்டு.

(பொன்னேரி சிவபாரத்துவ நிருபணசிகாமணி
திரு, தி. மா. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள்.)

முற்காலத்தில் ஸித்தரான மங்கணகர் தர்ப்பத்தின் நுனியினால் கையில் காயப்படுத்தப்பட்டவரானார். அவருடைய கையில் சாகரஸ (சிறந்த ஓஷதியின் ஸார)மானது பெருகியது. அந்த மங்கணகர் சாகரஸத்தைக் கண்டு ஸந்தோஷமுள்ளவராக நர்த்தனம் செய்தார். அவர் நர்த்தனம் செய்தவுடனே, அவருடைய தேஜஸினாலே மயங்கி ஜங்கமஸ்தாவரம் இரண்டும் கூத்தாடின. பிரம்மாதிகளான தேவர்களும் தபோதனர்களான ரிஷிகளும், 'தேவரே! நீர் இந்த ரிஷியை நர்த்தனம் செய்யாதபடி செய்யக்கடவீர்' என்று மங்கணகர் நிமித்தமாக மஹாதேவரிடம் விஞ்ஞாபனம் செய்தார்கள். மஹாதேவர், தேவர்களுக்கு ஹிதத்தைச் செய்யும் விருப்பத்தினால் களிப்பு மிகுந்த அந்த ரிஷியைக் கண்டு, 'ஓ! ஓ! பிராம்மண! என் நீர் நர்த்தனம் செய்கிறாய்? தபஸ்வியும் தர்மமார்க்கத்திலே நிலைபெற்றவனுமான உனக்கு யாதுகாரணத்தினால் இப்படிப்பட்ட பெருங்களிப்பு உண்டாயிருக்கிறது?' என்று வினவினார்.

ரிஷி சொல்லுகிறார்: 'பிரபுவே! பிராம்மணரே! என்கையினின்று பெருகுகின்ற எந்தச் சாகரஸத்தைப் பார்த்து அதிக ஸந்தோஷத்தினால் நான் நர்த்தனம் செய்கிறேனோ அதனை நீர் பார்க்கவில்லையா?' என்று சொன்னார். 'மஹாதேவர் மகிழ்ச்சியினால் மயங்கியிருக்கின்ற அந்த ரிஷியைப் பார்த்து நகைத்து, 'பிராம்மணா! நான் ஆச்சரியத்தை அடையவில்லை. என்னைப் பார்' என்று சொன்னார். இவ்வாறு சொல்லிவிட்டு மஹாதேவர், விரல் நுனியினால் தம்முடைய கட்டைவிரலை அடித்தார். அந்தக் காயத்தினின்று பனி போன்ற நிறமுள்ள பஸ்மம் வெளியில் வந்தது. அந்த முனிவர் அதைக்கண்டு வெட்கமடைந்து கால்களில் வணங்கினார். அந்தக்

* சென்னை கமர்ஷியல் பிரஸ், 1923ம் வருஷப் பதிப்பு.

தேவரை மஹாதேவராக எண்ணினர்: ஆச்சரியமடைந்து இந்த வார்த்தையையும் சொல்லலானர். 'நான், ருத்ரனென்னும் தேவரைக் காட்டிலும் மற்றதை மிக உயர்ந்ததும் சிறந்ததுமாக எண்ணவில்லை. சூலபாணியாயிருக்கிற நீர் தேவாஸுரர்களுடன் கூடின உலகத்துக்குக் கதியாயிருக்கிறீர். வித்வான்கள், உம்மால் இந்த உலகம் படைக்கப்பட்டதென்று இவ்வுலகில் சொல்லுகின்றார்கள். யுக க்ஷய காலத்தில் எல்லா வஸ்துவும் மறுபடியுமே உம்மிடத்திலேயே பிரவேசிக்கின்றன. நீர் தேவர்களாலும் அறியமுடியாதவர்; அவ்வாறிருக்க, என்னல் எப்படி அறியத்தக்கவராவீர்? பிரம்மாதிகளான தேவர்கள் வரங்களைக் கொடுப்பவரான உம்மை உபாஸிக்கின்றார்கள். நீர் எல்லாமாயிருக்கின்றீர். தேவர்களைப் படைப்பவரும் படைக்கும்படி செய்பவரும் நீர். உம்முடைய அனுக்கிரஹத்தினலே தேவர்களெல்லாரும் இவ்வுலகத்தில் ஓரிடத்தினின்றும் பயத்தை அடையாதவர்களாக ஸந்தோஷிக்கின்றார்கள். சங்கரரே! நீர் பிரபு; மேலான ஈஸ்வரராயிருப்பதனல் அதிகமாக விளங்குகிறீர். பிரம்மாவும் விஷ்ணுவும் உலகங்களை சிருஷ்டித்துக்கொண்டும் ரக்ஷித்துக்கொண்டும் உம்மிடத்தில் நிலைபெற்றிருக்கின்றார்கள். மோக்ஷத்தை விரும்பி நல்ல கர்மாக்களைச் செய்கின்ற மனிதர்களுடைய அந்தக்கர்மாக்களை அறிந்து அவர்களுக்கு மறுபடியும் ஸம்ஸார மார்க்கத்தில் வராமலிருக்கும்படி நித்யமான பதத்தைக் கொடுக்கிறீர். மஹேஸ்வரரே! சம்புவும் எப்பொழுதும் எல்லாப் பக்கங்களிலுமிருப்பவருமான ஈஸ்வரரைச்சரணமடைகிறேன். செய்கையினுலும் மனத்தினுலும் வாக்கினுலும் அவரையே நான் சரணமடைகிறேன்' என்று கூறினர். அந்த ரிஷியானவர் இவ்வாறு மஹாதேவரை ஸ்தோத்திரம் செய்துவிட்டு வணங்கினவரானர். 'தேவரே! கர்வத்தை முன்னிட்ட இப்படிப்பட்ட அற்பத்தன்மையானது என்னல் காட்டப்பட்டதனல் என் தவமானது குறையாமலிருக்கவேண்டுமென்றுநான்உம்மைப்பிரார்த்திக்கிறேன்' என்றார். பிறகு தேவர் அந்த ரிஷியைப் பார்த்து 'பிராம்மண! எனதருளினல் உன்னுடைய தவமானது விருத்தியடையட்டும். உன்னுடன் நான் இந்த ஆஸ்ரமத்தில் எப்பொழுதும் வஸிக்கப் போகிறேன். ஸப்தஸாரஸ்வத மென்கிற இந்தத் தீர்த்தத்தில் எந்த மனிதன் என்னை அர்ச்சிப்பானே அவனுக்குக் கிடைக்க அரி

தான வஸ்து ஒன்றும் இவ்வுலகத்திலாவது பரலோகத்திலாவது இராது. அவர்கள் ஸாரஸ்வத லோகத்தையும் அடைவார்கள். ஸம்ஸயமில்லை' என்று மறுபடியும் சொன்னார்.

## எல்லாம் ஈசுவரர் வசமே.
### (நகுலன் செய்த பிரசங்கம்.)

(கும்பகோணம், அத்வைதஸபா பண்டிதர் வேதாந்த கேசரி, மஹா மஹோபாத்தியாயர் பைங்காநாடு கணபதி சாஸ்திரிகள் மொழிபெயர்த்த சாந்தி பர்வம் * 12-வது அத்தியாயத்திரட்டு.)

இவ்வுலகம் உண்டாவதற்கு முன் பூமி, அப்பு, தேயு, வாயு, ஸூர்யன், சந்திரன், நக்ஷத்திரங்கள், திக்குகள், காலம், சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் இவை யொன்றுமில்லை. இவைகளை அறிவிக்கத்தக்க பிரத்யக்ஷம், அநுமானம், உபமானம், ஆகமம், அர்த்தாபத்தி, ஐதிஹ்யம் என்னும் பிரமாணங்களும் உதாஹரணமும் இல்லை. எவ்விடத்தும் ஸந்தேஹமும் நிச்சயமுமில்லை. தர்மமும் அதர்மமுமில்லை. தேவர், மனிதர், ஸ்தாவரம், ஜங்கமம், ஜாதி, ஆஸ்ரமம், இவைகளின் பிரிவுகள், வேலைசெய்பவர், பொருள், காமம், வேறு ஸம்பத்து, அதன் பயன் இவைகளில் யாதொன்றுமில்லை. இவ்வுலகெல்லாம் பிரகாசமற்று இருளாகவே யிருந்தது. ஆத்மா விருந்தும் மனத்துடன் சேர்க்கையை விரும்பவில்லை. மனமானது அறிவற்றது. ஆத்மா ஒன்றுதான் அறிவுள்ளது. இவ்வுலகெங்கும் வியாபித்தவராயும் ஒருவராயுமிருக்கிற ஈசுவரர் பிராணிகளுக்கும் மந்திரங்களுக்கும் தக்கஉருவத்தை உண்டுபண்ணவில்லை. மந்திரங்களுக்குத் தேவதைகளாய் விளங்கும் ஸ்ருஷ்டி கர்த்தர்களென்னும் பெயர் வாய்ந்த சில ரிஷிகள் அக்காலத்தில் ஈசுவரரால் உண்டுபண்ணப்பட்டார்கள். அவர்கள் ஈசுவரரிடமிருந்து தக்க அறிவு பெற்றுக்கொண்டு இப்பிரமாண்டத்தைக் கற்பித்து விசுவஸ்ருஜமென்னும் யாகத்தைச் செய்து பிதாமஹரென்னும் யாகத்தைச் செய்து பிதாமஹரென்னும் ஒருவரை யுண்டுபண்ணினார்கள். அப்பிதாமஹர் ஈசுவரர் அனுக்கிரஹத்தால் இவ்வுலகைச் சிருஷ்டிக்கத் தொடங்கினார். இவ்வுலகின் அறிவெல்லாம் ஈசரு

* சென்னை மவுண்ட்ரோடு 32 நெ. வைஜயந்தி பிரஸில் ம. வீ. இராமானுஜாசாரியரின் 1916ம் வருஷப் பதிப்பு.

டைய அறிவுதான் ஈசுவரரான அந்தச் சம்பு தம் சக்தியால் இவ்வுலகெல்லாம் வியாபரித்திருக்கிறார். அந்த ஈசரால் பிரளய காலத்தில் பிரம்ம தேவருக்கு அறம் பொருள் இன்பம் வீடென்னும் இவைகள் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. அறிவற்றனவும் சக்தியற்றனவும் சுகதுக்கங்களுக்கிருப்பிடமானதால் ஜந்துக்கள் ஈசரால் ஏவப்பெற்று ஸ்வர்க்கத்தையும் நரகத்தையும் அடைகின்றன. பிராணிகள் ஈசராலும் மனத்தாலும் விஷயங்களாலும் கர்மங்களாலும் ஏவப்பட்டுப் பிரகிருதியையும் புருஷனையும் ஸுக துக்கங்களையும் அடைகின்றன. தேவர், அஸுரர், கந்தர்வர், இவர்களுடன் கூடிய இவ்வுலகைப்படைக்க ஈசுவரரே ஜாதியையும் ஆஸ்ரமங்களையும் இவைகளின் பிரிவுகளையும் ஏற்படுத்தியிருக்கிறார். ஓ! மஹாராஜரே! நீரும் மற்றுமுள்ள எவர்களும் எவ்வகையாலும் ஈசுவரவசத்திலிருப்பவர்களே. பிராணிகளெல்லாம் அந்த ஈசுவரர் வசத்திலிருந்து கொண்டே ஜீவனத்தையும் மரணத்தையும் அடைகின்றன.''

## சிவனே தண்டோத்பத்தி கர்த்தா.
### (பீஷ்மப் பிரசங்கம்)

டை சாந்தி பர்வம் 122வது அத்தியாயத்திரட்டு.

''பிராணிகளுக்கு ஸாங்கர்ய முண்டாயிற்று. அப்பொழுது செய்யத்தக்கது செய்யத்தகாதது பூஜிக்கத்தக்கது பூஜிக்கத்தகாதது குடிக்கத்தக்கது குடிக்கத்தகாதது என்னும் வேற்றுமையேயில்லை. விதி யென்பது ஏது? ஜனங்கள் ஒருவரை யொருவர் ஹிம்ஸித்தார்கள். செல்லத்தக்கது செல்லத்தகாதது என்பதில்லை. தன் திரவியமும் பிறன் திரவியமும் ஸமமாயிருந்தன. ஜனங்கள் ஒருவருக்கொருவர் பொருளை அபஹரித்தார்கள். பல முள்ளவர்கள் பலமற்றவர்களைக் கொன்றார்கள். உலகம் மரியாதையில்லாததாயிற்று. பிறகு, பிதாமஹர் விஷ்ணு பகவானைப் பூஜித்து அவருடன் வரமளிப்பவரும் தேவருமான மஹாதேவரை நோக்கி 'ஓ! சங்கரரே! எல்லா விதிகளையும் நீர் அறிந்தவர். இந்த ஸமயத்தில் ஸாங்கர்யமில்லாமலிருக்கும்படி செய்யவேண்டும்' என்று சொன்னார். பிறகு, பகவான் அந்த மஹாதேவர் ஸங்காத்தை நாசஞ் செய்வதும் தம் உருவமுள்ளதுமான தண்டத்தை ஸ்ருஷ்டித்தார். அந்தத் தண்டமென்னும் கர்மத்திலிருந்து நீதியென்னும் ஸரஸ்வதிதேவியையும் மூன்றுலகங்களிலும் ப்ரஸித்தமான தண்ட நீதியையும் உண்டாக்கினார். பாபத்தைச்செய்கிறவர்களிடம் இந்தத் தண்டமானது எப்பொழுதும் நீதியால் செலுத்தப்படுகிறது.

தண்டத்தைச் செலுத்துங் காரணத்தால் அது தண்டநீதி யென்று இவ்வுலகில் சொல்லப்படுகிறது. சூலத்தைத்தரிக்கும் ப்ரபு

வும் மஹேஸ்வரரும் மஹாதேவருமான அந்தப் பகவான் தண்ட நீதியை ப்ரயோகஞ் செய்ய வேண்டியதற்காக எல்லாவிதத்திலும் பிரமாணங்களும் சாஸ்வதமுமான நான்கு வித்யைகளையும் அவைகளின் பலவிதமான பிரிவுகளையும் எல்லாச்சாஸ்திரங்களையும் உண்டு பண்ணினார். நான்கு வேதங்களும் ஆறு அங்கங்களும் மீமாம்ஸையும் விரிவான நியாயசாஸ்திரமும்புராணமும் தர்மசாஸ்திரமுமாகிய இந்த பதினான்கு வித்தைகளும் ஆயுர்வேதம் தனுர்வேதம் காந்தர்வம் என்னும் மூன்றும், நான்காவதான அர்த்த சாஸ்திரமும் ஆக வித்தைகள் பதினெட்டுக்களேயாம். ப்ரஸித்தமான இப்பதினெட்டு வித்யைகளும் தர்மத்தைச் சேர்ந்த ஸம்ஹிதைகளாகும். மஹேஸ்வரர் அந்தப் பதினெட்டு வித்யைகளின் பிரிவையும் கூறினார். மூந்நூறு சாஸ்திரங்களும் எழுபது மஹா தந்திரங்களும் மஹாதேவரால் கூறப்பட்ட இந்த வித்யைகளின் பிரிவுகள்தாம். ப்ரஸித்தமான பாசுபத தந்த்ரமும் ப்ரசித்தமான பாஞ்சராத்ரமும் யோக சாஸ்திரமும் ஸாங்க்யமும் லோகாயததந்த்ரமும் பிரம்மதுலையென்னும் ப்ரஸித்தமான தந்த்ரமும் தேவர்களுக்குரிய தர்க்க வித்யையும் ஸுக துக்கங்களைத் தெரிந்துகொள்ளக் காரணமென்று ப்ரஸித்திபெற்ற சாஸ்திரமும் எட்டுவிதத் தர்க்க வித்யைகளும் விரிவான நியாய சாஸ்திரமும் அவரால் சொல்லப்பட்டன. புராணத்திலுள்ளவைகளும் யாகத்தைப் பற்றியவைகளுமான ஸம்ஹிதைகள் பதினெட்டுக்கென்றறியவேண்டும். இவ்வுலகிலுள்ள அவ்வளவு புராணங்களும் ஸம்ஹிதைகளும் அவரால் இயற்றப்பட்டன. தர்ம சாஸ்திரங்களும் அவ்விதமே புராணங்களும் வேதங்களும் ஒரே கருத்துள்ளவைகளேயல்லாமல் வேறுவிதமில்லை. ஆகையால், தேவரான சங்கரபகவான் பல பொருள்களுள்ள எல்லாச் சாஸ்திரங்களையும் காலத்தை அறிவிக்கும் சாஸ்திரங்களையும்அறுபத்துநான்கு கலைகளையும் உத்தரபாகத்துடன் கூடிய ஆயுர்வேதத்தையும் பதினெட்டுப் பிரிவுகளுள்ளதும் நிலைபெற்றதுமான தண்ட நீதியையும் காந்தர்வ சாஸ்திரத்தையும் பலவித சாஸ்திரமுள்ள இதிகாஸத்தையும் கூறினார். இந்த வித்யைகளும் திரும்பவும் அவைகளின் விஸ்தாரமான ஆயிரம் பிரிவுகளும் சங்கரரால் சொல்லப்பட்டன. அந்தப் பகவான் அந்தந்த வகுப்பிற்கு ஒவ்வொருவரைத் தலைவராகச் செய்தார். பிறகு, மஹாதேவர் தர்மத்தை ரக்ஷிக்கும் தண்டத்தை விஷ்ணுவிடம் கொடுத்தனர். விஷ்ணு அதை அங்கிரஸினிடம் கொடுத்தனர். அங்கிரஸானவர் இந்திரன் மரீசி இவ்விருவர்களிடமும் கொடுத்தார். மரீசி, ப்ருகுவினிடம் கொடுத்தார். ப்ருகு, ரிஷிகளிடம் கொடுத்தார். ரிஷிகள் லோகபாலர்களிடமும், லோகபாலர்கள் க்ஷுபர் பொருட்டும், க்ஷுபர் மனுவின் பொருட்டும் கொடுத்தார்கள்''.

## கத்தியின் வரலாறு.

### (பீஷ்மப் பிரஸங்கம்)

ஷை சாந்தி பர்வம் 164வது அத்தியாயத் திரட்டு.

"பிரம்மதேவர் யாகத்தைச் செய்யத் தொடங்கினார். அந்த யாகத்தில் ஒரு பூதம் கிளம்பிற்று. அந்தப் பூதத்தைக் கண்டு அந்தப் பிதாமஹரானவர் மஹரிஷிகளையும் தேவர்களையும் கந்தர்வர்களையும் நோக்கி, 'உலகத்தை ரக்ஷிக்கவேண்டியும் தேவர்களைப் பகைக்கும் அஸுரர்களைக் கொல்லவேண்டியும் இவ்விதமான பூதம் என்னால் சிந்திக்கப்பட்டது. வீர்யமுள்ள இது கத்தியென்று பெயருள்ளது' என்று சொன்னார். உடனே, அந்தப் பூதமானது அந்த உருவத்தை விட்டு விட்டு அழுக்கில்லாததும் கூர்மையான முனையுள்ளதுமான கத்தியேயாகிக் கிளம்பி காலாந்தகன் போல விளங்கிற்று. பிறகு, பிரம்மதேவர் அந்தக் கத்தியை விருஷபத்வஜரும், நீலகண்டருமான ருத்ரரின் பொருட்டுக்கொடுத்தார். அந்தருத்ரபகவான் கத்தியைவாங்கிக்கொண்டுவேறு உருவத்தை எடுத்துக்கொண்டார். பிறகு, ருத்திரமூர்த்தி கத்தியையும் கேடகத்தையும் எடுத்துக்கொண்டு அஸுரர்களை நாசஞ்செய்ய வேண்டும் என்று எண்ணத்துடன் யுத்தஞ் செய்ய விரும்பிக் கத்தியைச் சுழற்றிக்கொண்டு ஆகாயத்தில் ஸஞ்சரித்தார். அப்பொழுது அந்த ருத்திரரின் உருவமானது பயங்கரமாக விளங்கிற்று. மங்கள ரூபியான அந்த ருத்ரரானவர் அஸுரர்களைக் கொன்று உலகத்தைத் தர்மம் மேவிட்டதாகச் செய்தபின் பயங்கரமான அந்த வுருவத்தை நீக்கிவிட்டு, மங்களமான உருவத்தை யெடுத்துக்கொண்டார். பிறகு, மஹரிஷிகள் அனைவர்களும் எல்லாத் தேவக் கூட்டங்களும் ஆச்சர்யமான அஸுர ஜயத்தால் தேவதேவரான ருத்ரரைத் துதித்தார்கள். பிறகு, ருத்ரபகவான் கத்தியை விஷ்ணுவிடம் கொடுத்தார். விஷ்ணு மரீசியிடம் கொடுத்தார். மரீசி சுக்ரரிடங் கொடுத்தார். சுக்ரர் ரிஷிகளிடம் கொடுத்தார். ரிஷிகள் இந்திரனிடம் கொடுத்தார்கள். இந்திரன் லோகபாலர்களுக்குக் கொடுத்தான். லோகபாலர்கள் மனுவுக்குக் கொடுத்து 'நீ மானிடர்களுக்கு ஈசனாகியிருக்கிறாய்; தர்மத்தை உள்ளிற்கொண்ட கத்தியால் ப்ரஜைகளை ரக்ஷித்துக்கொள்' என்று சொன்னார்கள். அந்தக் கத்திக்கு ருத்திரர் குருவாகிறார். கத்தி ஆயுதங்களுள் முதலிலுண்டானது. இது மஹேஸ்வரரால் உண்டுபண்ணப்பட்டது. யுத்தத்தில் ஸமர்த்தர்களாயிருப்பவர்கள் எப்பொழுதும் கத்திக்குப் பூஜை செய்யவேண்டும்".

---

# உலகினர் போற்றும் திருக்குறள்.

*சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடந்த திருவள்ளுவர் திருநாள் கூட்டத்தில் தலைமை வகித்த மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் செய்த பிரசங்கத்தின் சாராம்சம் வருமாறு:—*

திருவள்ளுவரையும் அவரது திருக்குறளையும் பாராட்டாத புலவர்கள் இலர். தமிழ் மணம் எங்கெங்கே உண்டோ அங்கெல்லாம் திருக்குறளின் நறுமணம் வீசிக்கொண்டேயிருக்கும்; தமிழ் மணம் வீசாத இடத்திலும் குறளின் மணம் வீசுகின்றதென்று கூறுதலே இன்னும் பொருத்தமாகத் தோன்றுகிறது. ஏனெனின் தமிழ் வழங்காத பல நாடுகளிலுள்ள அறிஞர்கள் திருக்குறளின் மொழிபெயர்ப்புக்களைப் படித்து இன்புறுகின்றார்கள். அங்கே தமிழ்மணம் ஏது? நாமெல்லாம் தமிழையறிந்து அதன்மூலம் குறளை அறிகின்றோம். அவர்களெல்லாம் குறளின் பொருளறிந்து அதன் மூலம் தமிழைப்பற்றி அறிந்துகொள்கிறார்கள். இதனால் தமிழைக் காட்டிலும் குறளுக்கு வியாபகம் அதிகமாக இருப்பதை அறிகிறோமல்லவா? குறளைப் போன்றதொரு நூல் வேறு எந்தமொழியிலும் இல்லையென்று, பலமொழிகளை அறிந்தவர் கூறுகின்றனர். இதனைப் பலமொழிகளில் மொழிபெயர்த்திருக்கின்றார்கள். வடமொழியில் அறத்துப்பாலை மாத்திரம் பெயர்த்து 'நீதி குஸுமமாலா' என்று ஒருவர் வெளியிட்டிருக்கின்றார். அதனையன்றிக் குறள் முழுவதையும் என்னுடைய நண்பரொருவர் பல வருடங்களுக்கு முன்பு வடமொழிச் சுலோகங்களாக மொழிபெயர்த்தமைத்திருக்கின்றார்.

இத்தகைய சிறந்த நூலை இயற்றிய திருவள்ளுவரது வரலாறு ஒருவரையறையாகவழங்கப்படவில்லை. அவருடையபிறப்பைப்பற்றியும், சாதியைப் பற்றியும், சமயத்தைப் பற்றியும், தொழிலைப் பற்றியும், ஆச்சிரமத்தைப் பற்றியும் ஒன்றுக்கொன்று வேறுபாடான செய்திகள் பல தமிழ்நாட்டில் உலவுகின்றன. அவற்றை ஆராய்ந்து அறுதியிடுதற்குரிய கருவிகள் போதியனவாகக் கிடைக்கவில்லை. இக்குறை திருவள்ளுவர் திறத்தில் மட்டுமே அமைந்ததன்று; பெரும்பாலான தமிழ்ப் புலவர்களுடைய வரலாறுகளும் இத்தகையனவே.

பல வகையான கொள்கையினரும் திருவள்ளுவரைத் தங்கள் தங்களைச் சார்ந்தவராகக் கூறுவதும், தங்கள் கூற்றுக்கு ஆதாரங்களை எடுத்துக் காட்டுவதுமாகிய இவை இப்புலவர்பிரான் எல்லோராலும் விரும்பப்படும் சிறப்பினர் என்பதைத் தெரிவிக்கின்றன. சங்க காலத்துப் புலவர்களையும், நூல்களையும் முற்காலத்தினரும் பிற்காலத்தினரும் வழங்கும்போது 'திரு' வென்னும் அடைகொடுத்து வழங்கியதாகக் காணோம். ஆயினும் வள்ளுவரையும் குறளையும் திருவள்ளுவர் என்றும், திருக்குறளென்றும் கூறுகின்றோம். 'திரு' வென்பதற்குத் திருக்கோவையின் உரையில் பேராசிரியர், கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கமென்று உரை கூறுகின்றார். வள்ளுவரும், இவர் வாய்மொழியும் யாவராலும் ஒருங்கே விரும்பப்படுவதனால் திருவென்னும் அடை மிகப் பொருத்தமுடையதே. இவருக்கு அமைந்த பல பெயர்கள் இவருடைய சிறந்த இயல்புகளை வெளிப்படுத்துகின்றன.

திருவள்ளுவரைப் பற்றிய வரலாறுகள் ஒருபால் இருப்ப, நமக்கு இப்பொழுது பயன்படுவது திருக்குறளாகிய திருவள்ளுவரேயாம். தமிழில் கருத்தாவாகு பெயருக்கு உதாரணமாகத் திருவள்ளுவரென்பதையன்றி நூல்வழக்கில் வேறு ஆட்சி இப்பொழுது கிடைக்கவில்லை. அகத்தியம், தொல்காப்பிய மென்பன ஈறு திரிந்த பெயர்களாகவுள்ளன; ஆசிரியர் பெயரை உள்ளவாறே கூறி நூலை உணர்த்தும் இயல்பு அவற்றிற்கு இல்லை. எனவே, திருக்குறளைப் பற்றிப் பேசினாலும் ஆகுபெயர்ப் பொருளால் திருவள்ளுவரைப் பற்றிப் பேசியதாகவே அமையும்.

ஏனைய தமிழ் நூல்களிற் காணப்படாத சில சிறப்பியல்புகள் திருக்குறளுக்கு உண்டு. நூற்பயனாகிய அறம்பொருளின்பம் வீடென்பவற்றைத் தெளிவாகக் கூறிய நூல்களுள் குறளுக்கு ஈடானது வேறு இல்லை. சங்கமருவிய பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பவற்றுள் திருக்குறளைப்போல 1330 செய்யுட்களையுடைய நூல் வேறொன்றும் இல்லை; குறட்பாவில் அமைந்ததும் இல்லை.

திருக்குறள், தமிழ்ச்செய்யுட்களில் முதற்பாவாகிய வெண்பாவில் முதல் வகையாகிய குறட் பாக்களாலாகிய சிறப்புடையது;

இச்சிறப்பே இந்நூலுக்கும் பெயரைத் தந்தது. சங்க காலத்து நூல்களில் நாலடியாரும், ஆசிரிய மாலையும், கலித்தொகையும், பரிபாடலும், பட்டினப்பாலையாகிய வஞ்சிநெடும் பாட்டும் யாப்பாற் பெயர்பெற்றன. ஆயினும் நாலடியாரையன்றி எத்தனையோ நாலடிப் பாட்டுகளுள்ள நூல்களும், ஆசிரியமாலையையன்றி வேறு பல ஆசிரியப்பா நூல்களும், கலித்தொகையையன்றிக் கலிப்பா அமைந்த நூல்களும் முற்காலத்து இருந்தன; முதற் சங்கத்து எத்தனையோ பரிபாடல் நூல்களும், பல வஞ்சிப்பாட்டுகளும் உண்டென்கிறோம். குறட் பாவினால் வேறு ஒரு பெரிய இலக்கிய நூல் முன்பு இருந்ததாகத் தெரியவில்லை. இலக்கண நூல்கள் மட்டும் சில இருக்கின்றனவென்று யாப்பருங்கல விருத்தியால் தெரியவருகின்றது.

திருக்குறளைப் பாராட்டும் திருவள்ளுவமாலை யென்ற ஒரு நூல் இருக்கின்றது. அதில் பல புலவர்கள்பாடி யுள்ளார்கள். அந்நூலைப் பாடியவர்கள் யாராயினும் அது பல நூற்றாண்டுகட்கு முன்பே உண்டாயிற்றென்பதற்குப் போதிய ஆதாரம் இருக்கின்றது. இங்ஙனம் ஒரு நூலைச் சிறப்பித்துப்பாடிய தனி நூலொன்று வேறு எந்த நூலுக்கும் முற்காலத்து அமையவில்லை.

திருக்குறளுக்கு உரை வகுத்தவர் பதின்மரென்று ஒரு தனிப் பாடல் கூறுகின்றது. இங்ஙனம் பதின்மர் உரை யெழுதிய நூலும் வேறொன்றில்லை. அந்தப் பதின்மருடைய உரைகளும் இப்பொழுது கிடைக்கவில்லை. இப்பொழுது கிடைக்கும் உரைகளுள் பரிமேலழகருரையே மிகச் சிறந்தது. மணக்குடவருரையும் இப்பொழுது வழங்குகின்றது. பரிப்பெருமாளென்பவரது உரையொன்று சிலர் பால் உண்டென்று தெரிகின்றது இப்பதின்மர் உரையையன்றி வேறு சில பழைய உரைகளும் இந்நூற்கு உண்டு.

இந்நூலுக்கு நேரே உரை இயற்றினோர் இங்ஙனம் பலராக, வேறு பல உரையாசிரியர்கள் தாங்கள் எழுதிய பிற நூலுரைகளிலே வாய்ப்பு நேர்ந்த விடங்களில் திருக்குறட் பாக்கள் சிலவற்றிற்கு உரையிட்டுச் செல்கின்றனர். பேராசிரியர் நச்சினார்க்கினியர், சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர், அடியார்க்கு நல்லார் முதலியவர்களுடைய உரைகளில் சில குறள்களுக்கு உரைகளைக் காணலாம்.

அவர்கள் கூறும் உரைகளில் பரிமேலழகரோடு மாறுபட்ட பகுதி களும் உண்டு. அவைகளைக் எடுத்துக் கூறின் விரியும்.

ஒரு நூலின் ஆசிரியர் காலத்திலேயே அதற்கு உரை அமைந் திருப்பின் இத்தகைய மாறுபாடுகள் உண்டாகக் காரணமில்லை. பிற் காலத்தில் வந்த உரையாசிரியர்கள் நூலாசிரியருடைய கொள் கையை முற்றும் உணர்தல் இயலாது. ஆகலின் அவர்களுடைய உரைகளிற் சில மாறுபாடுகள் இருத்தல்கூடும். அவர்கள் செய்த பணைத்தினை நன்றியினால் நினைத்துணையாகிய அம்மாறுபாடுகளை நாம் மறந்துவிடுகிறோம்.

சங்கர நமச்சிவாயர் நன்னூல் உரையில் இசையெச்சம் என்னும் இலக்கணத்திற்கு உதாரணமாக "இணரெரி தோய்வன்ன" என்னும் திருக்குறளை எடுத்துக்காட்டி மிக அழகாக விரிவுரை எழுதியிருக்கின்றார்.

ஒரு செய்யுள் நூலுக்கு வசனத்தில் உரை இயற்றுவதோடு செய்யுளுருவத்திலேயே உரையியற்றுவதும் உண்டு. இது வட மொழியிற் பெருவழக்கு. தமிழ் நூல்களிலும் சிவஞானபோதத் துக்குரிய உதாரண வெண்பாக்களும், சித்தியார் முதலியனவும் உரை நிலையிலேயே உள்ளன. தேவாரப் பதிகங்களில் திருப்பாசு ரம் முதலிய சிலவற்றிற்குப் பெரிய புராணத்தில் சேக்கிழார் உரை விரித்துச் செல்கின்றார். இவற்றைப் போலவே திருக்குறளுக்கும் செய்யுளுருவத்தில் உரை யுண்டு. தனியே குறளுரை யென்னும் பெயர் பெறவிட்டாலும் அவை உரைகளின் தன்மையை உடை யனவே.

இரங்கேச வெண்பா, சிவ சிவ வெண்பா, வடமலை வெண்பா, தினகர வெண்பா, திருமலை வெண்பா, சோமேசர் முதுமொழி வெண்பா முதலியன திருக்குறளுக்கு உதாரணம் கூறும் நூல்கள். உரை வகைகளில் உதாரணம் கூறுதலும் ஒன்று ஆகலின் முற் கூறிய நூல்கள் திருக்குறளின் உரை நூல்களென்றே கூறல்தகும். சினேந்திர வெண்பா வென்னும் ஒரு நூல் ஒரு சைனப் பெரியா ரால் இயற்றப்பட்டதென்றும், அதில் ஒவ்வொரு குறளுக்கும் ஒவ் வொரு வரலாறு உதாரணமாகக் காட்டப்பெற்றுள்ளதென்றும்

1330 குறளுக்கும் 1330 வெண்பாக்கள் அந்நூலில் உள்ளனவென்றும் பல வருஷங்களுக்குமுன் வேதாரணியத்திலிருந்த சைன நண்பர் ஒருவர் கூறக் கேட்டிருக்கிறேன். அவர். அந்நூலிலுள்ள சில வெண்பாக்களையும் சொல்லிக் காட்டினார். முதுமொழி மேல் வைப்பு என்றொரு நூல் உள்ளது. அதில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பாலென்னும் மூன்றுக்கும் திருக்குறளாகிய திருவள்ளுவப் பயனையும், வீட்டுப்பாலுக்குச் சித்தாந்த சாத்திரமாகிய திருவருட் பயனையும் அமைத்த செய்யுட்கள் உள்ளன.

இவற்றையன்றித் தமிழ் நூலாசிரியர்கள் பலர் திருக் குறட் கருத்துக்களை மனதிற்கொண்டு அவற்றிற்கு உரைகூறுவார்போலத் தம் நூல்களிற் பல செய்யுட்களை அமைத்திருக்கிறார்கள்.

ஆன் முலை யறுத்த அறனிலோர்க்கும், மாணிழை மகளிர் கருச் சிதைத்தோர்க்கும், பார்ப்பார்த்தப்பிய கொடுமையோர்க்கும், வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென, நிலம்புடை பெயர்வதாயினு மொருவன்செய்தி கொன்றோர்க் குய்தியில்லென அறம் பாடிற்றே ஆயிழை கணவ" என்னும் புறநானூற்று அடிகள்,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்னும் அருமைக் குறளின் விரிவுரையைப் போல விளங்குதல் கவனிக்கத் தக்கது. அக் குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகர், எந்நன்றி கொன்றார்க்கும் என்பதற்கு பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும் என்று பதவுரை எழுதிவிட்டு, விசேடவுரையில், பெரிய அறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலை யறுத்தலும் மகளிர் கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த் தப்புதலும் முதலிய பாதகங்களைச் செய்தல், என்று எழுதினார். முற்கூறிய புறநானூற்றின் அடிகளையே அவர் எளிதில் உரை நடையிற் கூறியிருத்தல் காண்க.

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்"

என்னும் குறளுக்கு உரைபோல,

"இடுக்கண்வந் துற்றகாலை யெரிகின்ற விளக்குப்போல
நடுக்கமொன்றானு மின்றிநகுக தாம்நக்க போழ்துவ்

விடுக்கணை யரியுமெஃகாம் இருந்தழுதியாவர் உய்ந்தார்
வடுப்படுத்தென்னை யாண்மை வருவவந் தறுங்களன்றே''

என்னும் சிந்தாமணிச் செய்யுள் அமைந்திருக்கிறது.

''தொழுததங் கையினுள்ளுந் துறுமுடியகத்தும் சோர
அழுதகண்ணீரி னுள்ளுமணிகலத் தகத்து மாய்ந்து
பழுதுகண்ணரிந்து கொல்லும் படையுடனுடுங்கும்பற்று
தொழிகயார் கண்ணுந்தேற்றம் தெளிதற்றூர் விளிகுற்றாரே''

என்னும் சிந்தாமணிச் செய்யுள்,

''தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து''

என்னும் குறளின் விரிவென்று கூறலும் வேண்டுமா?

''வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்''

என்னும் குறளுரையில் பரிமேலழகர், 'அதுதானும், தீங்கு பயவாதாயின் மெய்ம்மையாம், பயப்பிற் பொய்ம்மையாம்' என்று எழுதியுள்ளார். வாய்மைச் சொல்லும் தீங்கு பயப்பதாயின் பொய்ம்மையாகும் என்று அவர்வசனத்தாற்கூறியஇவ்வுரையையே வேறு வகையில் அழகியசெய்யுளுருவத்தில் சிவப் பிரகாச சுவாமிகள்,

''வாய்மையெனினும் புலரியைக் கூறுதல் வாரணங்காள்
சேய்மைய றுநங் கொழுநர்தங் கூட்டஞ் சிதைத்தெமக்குத்
தீமைபயத்தமையால் வெங்கை நாயகர் செய்தவறத்
தூய்மை யுணர்ந்தவர் வாய்மையன்றுமெனச் சொல்லுவரே''

என்று அமைத்திருக்கின்றனர்.

விநாயக புராணம் அரசியற் படலத்தில் குறட்பாக்கள் பலவற்றிற்கு உரை காணலாம். இங்ஙனம் அமைந்த தமிழ் நூற் பகுதிகள் அளவில.

குறட் கருத்துக்களையெடுத்தாளாத தமிழ்நூலே இல்லையென்று கூறுவது மிகையாகாது. தமிழ்ப்புலவர்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நூல்களில் திருக்குறளே முதன்மை வாய்ந்த தென்பதில்

ஐயமில்லை. நீதிநெறி விளக்கம் குறட் கருத்தைச் சுருக்கமாக வேறு உருவத்தில் அமைத்துச் சொல்லும் நீதி நூலாகும். கும்ப கோணம் காலேஜில் தமிழ்ப்பண்டிதராக இருந்த ஸ்ரீ சி. தியாகராஜ செட்டியார் அந்நூலை "இது குறள் பருவத்திற்பெற்ற பிள்ளையைப் போன்றது" என்பர்.

திருக்குறள் தமிழுக்குச் சிறப்பாக அமைந்த நூலென்பது, "அகர முதல் என்று தமிழ் நெடுங்கணக்கின் முதலாகிய அகரத்தில் தொடங்கி, ஊடுதல் காம...கூடி முயங்கப்பெறின்" என்று ஈறாகிய னகரத்தில் முடிந்தமையால் பெறப்படுகின்றது. தமிழ் என்னும் சொல்லில் ழகரமாகிய தமிழ்ச் சிறப்பெழுத்து ஒன்று அமைந்திருப் பதுபோலக் குறள் என்பதில் றகரமாகிய சிறப்பெழுத்து அமைந் திருக்கின்றது.

தமிழ் நூல்களிற் சிறந்தனவென்று சில நூல்களைத் தேர்ந் தெடுத்துத் தொகுத்துச் சிலர் சில செய்யுட்களின் வாயிலாகத் தெரி விக்கின்றனர். அவர்கள் தங்கள் தங்கள் மனத்துக்கு உவந்த சில வற்றைக் கூறியிருத்தலின், ஒருவர் கருத்தோடு வேறொருவர் கருத்து வேறுபடுகின்றது. ஆயினும், அங்ஙனம்கூறும் பல ருடைய செய்யுட்களிலும் திருக்குறளின் பெயர் காணப்படு கின்றது.

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழு முனிமொழியும்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

என்பது நல்வழிப் பாட்டு. இதிற் கூறப்பட்ட ஏழு நூல்களில் குறள் தலைமை பெற்று விளங்குகின்றது.

"வள்ளுவர்சீ ரன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—விள்ளுபுகழ்த்
தொண்டர் புராணந் தொகுசித்தி யோராறும்
தண்டமிழின் மேலாந் தரம்"

என்பது ஒரு சைவப் பெரியார் வாக்கு. தண்டமிழில் மேலாந் தரத்து நூல்களாகிய ஆறனுள் திருக்குறள் முதன்மை பெற் றுள்ளது.

"திருத்தக்க மாமுனி சிந்தாமணி கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம்—உருத்தக்க
கொங்குவேண் மாக்கதையைக் கூறேங் குறளணுகேம்
எங்கெழிலென் ஞாயி றெமக்கு"

என்பதில் எதிர்மறை முகத்தினாற் சிறப்பித்த நூல்கள் நான்கனுள் முடிபாக மிளிர்கின்றது.

"தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார் மூன்றினு முழங்கும்" என்று இலக்கணக் கொத்துடையார் பாராட்டும் மூன்றில் நாயகமாக உள்ளது.

"நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி"

என்னும் பழமொழியிலுள்ள இரண்டில் ஒன்றாக அமைந்திருக்கின்றது. இத்தகைய பெரும் சிறப்பை வேறு எந்த நூல் பெற்று விளங்குகின்றது?

திருக்குறளைத் திருவள்ளுவமாலை பலபடப் பாராட்டுகின்றது. அது வேதத்தைப் போன்றதென்றும், மூவேந்தர் முடியிற் சூடும் மாலைபோன்றதென்றும், முப்பாலில் நாற்பால் மொழிவதென்றும் சிறப்பிக்கின்றது. அந்நூலில் ஒரு செய்யுள் குறளுக்குத் திருமாலை உவமிக்கின்றது. திருமால் தம் திருவடிகள் இரண்டாலும் புறத்தே தோன்றும் உலகத்தை யளந்ததுபோலத் திருக்குறள் தன் அடி இரண்டாலும் மக்களின் அகத்தே தோன்றுவனவற்றை யெல்லாம் அளந்ததென்பது அச் செய்யுளின் கருத்து. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் வெங்கையுலாவில் இங்ஙனமே இந்நூலுக்கும் திருமாலுக்கும் ஒப்புக்கூறுகின்றனர். அங்கே அவர் கூறும் பொதுத் தன்மை வேறு. திருவள்ளுவர் ஒரு பொருளை வற்புறுத்தும் பொருட்டுப் பத்து முறை கூறியதுபோலத் திருமால் ஒரு கருத்தை வற்புறுத்தப் பத்து அவதார மெடுத்தாரென்பது அப்பகுதியின் கருத்து. சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில் "பொய்யில் புலவன் பொருளுரை" என்று குறளைப் பாராட்டுகின்றார். சிவப்பிரகாசர் நவத்தமிழ் வேதமென்று போற்றுகின்றார். தமிழ் விடுதூதென்னும் ஒரு பிரபந்தம் தமிழைக் குழந்தையாக உருவகம் செய்து வருணிக்கையில்,

"முப்பாலும், மிஞ்சிப் புகட்ட மிக வளர்ந்தாய்" என்று சொல்லுகின்றது. குழந்தையின் வளர்ச்சிக்குப் பால் எங்ஙனம் உதவுமோ, அங்ஙனமே தமிழின் வளர்ச்சிக்குக் குறள் மிக உதவுகின்றது என்னும் அரிய கருத்து இதனால் வெளியாகின்றது. இவ்வாறே குறளைப் பாராட்டிய நூற் பகுதிகளைத் தொகுத்துக் கூறுவதாயின் அது மிக விரியும்.

குறளைப்பற்றிப் புறத்தே காணப்படும் செய்திகளைக் கொண்டு இதுகாறுஞ் சில கூறப்பட்டன. இனி அந்நூலின் அகத்தே உள்ள செய்திகளாற் பெறப்படுவனவற்றைத் துணையாகக்கொண்டு சில சொல்ல விரும்புகிறேன்.

திருவள்ளுவருடைய நூல் மிகச் சிறந்த அமைப்புடையது. மிக அரிய விஷயங்களை வரையறைப்படுத்திச் சுருக்கமாக அந்நூல் கூறுகின்றது. ஒரு பொருளின் இலக்கணத்தைக் கூறுதலும் அதன் இன்றியமையாமையைவிளக்குதலும், அதனாற் பெறப்படும் பயனை யறிவுறுத்தலும் அதனை நாம் மேற்கொள்ளுதற்குரிய தந்திரத்தை யுரைத்தலும், உலகத்திலுள்ள பொருள்களின் வாயிலாக உண்மையை நிரூபித்தலும், உவமைகளாலும் உதாரணங்களாலும் பொருளைப் பலப்படுத்தலும் திருவள்ளுவர் வழக்கங்களிற் சில.

மக்கள் விலக்க வேண்டியவற்றைப் பெரும்பாலும், அவை அஞ்சாமை, அழுக்காறாமை, இடுக்கணழியாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, கொல்லாமை, சிற்றினஞ் சேராமை, பிறனில் விழையாமை, புறங்கூறாமை, பெரியாரைப்பிழையாமை, பொச்சாவாமை, மடியின்மை, வெகுளாமை, வெஃகாமை, வெருவந்த செய்யாமை என்பன போல எதிர்மறை முகத்தாற் கூறுதல் இவர் இயல்பு.

ஒரு நீதி மறை முகத்தாலும் உடம்பாட்டு முகத்தாலும் புலப்படுத்துவர்; ஒரு நீதிக்கு மற்றொரு நீதி உவமையாக வைத்து இரண்டையும் வற்புறுத்துவர்.

காமத்துப் பாலில் இடக்கர்ச் சொல்லே இல்லாமையும், பரத்தையிற்பிரிவை விளக்கமாகச் சொல்லாமையும் குறள் சிறந்த ஒழுக்க நூலென்பதைப் புலப்படுத்துகின்றன.

குறளிலுள்ள பலபாக்களால் திருவள்ளுவர் கல்வியினிடத்தே மிக்க ஆர்வமுடையா ரென்பதும் புலவர்கள் பால் குறையாத அன்புடையவரென்பதும் பெறப்படும். கல்வியைப் பற்றிக் கூறவந்தவர் தாம் உரைக்கப் புகுந்த செய்திகள் பத்துக் குறளில் அடங்காமை பற்றி, கல்வி-கல்லாமை-கேள்விஎன்னும் மூன்று அதிகாரங்களால் உணர்த்துகின்றார். அன்றியும் அறிவு சொல்வன்மை, அவையறிதல், அவையஞ்சாமை யென்பனவும் கல்வியோடு தொடர்புடைய அதிகாரங்களேயாகும். இவ்வளவு மிகுதியாக வேறு எதனையும் வற்புறுத்தவில்லை. கல்லாதாரை விலங்குகளென்றும், குருடர்களென்றும் கூறும் வள்ளுவர் மதி நுட்பம் நூலோடுடையவரை மிகப் போற்றுகின்றார். பல நூல்களைப் படித்துப் படித்து அவ்வின்பத்திலே அவர் திளைத்திருக்கவேண்டு மென்று தோன்றுகின்றது. நிரம்பிய நூலின்றிக் கோட்டி கொளலை வெறுக்கும் இப்பெரு நாவலர் பல நூல்களைப் படியாமல் இருத்தற்கு நியாயமில்லையல்லவா? படிக்குந்தோறும் இன்பங் கண்டவராதலினால்தான் இவர், பண்புடையாளர் தொடர்பினால் வரும் இனிமையை "நவில்தொறும் நூனயம் போலும்" என்னும் உவமையால் விளக்குகின்றார். அங்ஙனம் மேலும் மேலும் படிக்கப் படிக்கத் தோன்றும் நயத்தில் உள்ளம் உருகி, "இதுகாறும் இதனை அறிந்திலமே" என்று இரங்கினர். இங்ஙனம் இப்பொழுது மறைப் புலவர் இரங்கும் காட்சி.

"அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறும் சேயிழை மாட்டு"

என்னும் காமத்துப்பாற் குறளைப் படிக்கும்போது நம் அகக் கண்ணுக்குப் புலனாகவில்லையா?

பற்றற்று மெய்ப்பொருள் கண்டு பிறப்பறுக்கும் துறவற வியலினும் அம் மெய்ப்பொருள் காண்டற்குக் கல்வி பெருந்துணையாகு மென்பதை,

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

என்று வற்புறுத்தும் வள்ளுவர், கல்வியினும் சிறந்ததொருபொருள்

உலகத்தில் இருப்பதாகஎண்ணஇடமில்லை அதனாலேதான் அதனைச் சாந்துணையுங் கற்கவேண்டுமென்று விதிக்கின்றார்.

> "யாதானு நாடாமல் ஊராமல் என்னொருவன்
> சாந்துணையும் கல்லாத வாறு"

என்னும் குறளைக் காண்க. அங்ஙனம் கற்றவன் ஓர் ஊருக்கு மட்டும் உரியோனல்லன்; ஒரு நாட்டுக்கு மட்டும் உரியோனல்லன்; எல்லா ஊருக்கும் எல்லா நாட்டுக்கும் உரியனென்ற கருத்துக்கள் இக்குறளில் அமைந்துள்ளன. இக்குறளுக்குத் திருவள்ளுவரையே உதாரணமாகக் கூறிவிடலாம். இவருடைய புகழுடம்பு இவ்வுலகத்துக்கே பொதுச் செல்வமாக நிலவுகின்றதன்றோ?

திருவள்ளுவர் பல மொழி நூல்களையும் பல சமய நூல்களையும் ஆய்ந்தவரென்பது அவற்றிலுள்ள கருத்துக்கள் திருக்குறளில் அங்கங்கே அமைந்து விளங்குவதனால் அறியலாம். அன்றியும், இவருடைய வாக்கிலிருந்தே இவர் மதி நுட்பம் நூலோடுடையரென்பதை உணரலாம்.

நீத்தார் பெருமையை விளக்கவந்த தெய்வப் புலவர்,

> "ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
> வேண்டும் பனுவற் றுணிவு"

என்று அருளினர். இங்கே பனுவல்களின் துணிவு இதுவென்று அறுதியிட்டுரைத்தமையால், அப்பனுவல்களை இவர் ஆய்ந்தறிந்தனரென்பதற்கு இக்குறளே சான்று பகர்கின்றது.

> "பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை அதுஉலகத்
> தெப்பானூ லோர்க்குந் துணிவு"

என்ற குறள், உலகத்திலுள்ள பலவகைப்பட்ட கொள்கையுடையார் நூல்களில் இப்பொய்யில் புலவர் அறிவுடையாரென்பதைத் தெளிவுறுத்துகின்றது.

அரணைப் பற்றி,

> "உயர்வகலந் திண்மை அருமையிந் நான்கின்
> அமைவரண் என்றுரைக்கும் நூல்"

என்றமையால் இவர் பொருள் நூல் பலவற்றை யாய்ந்துள்ளன ரென்பது புலப்படும்.

"நூலோர், வளி முதலா வெண்ணிய மூன்று" என்பதனால் இவர் மருத்துவ நூல்களையும் ஆய்ந்தவராதலை உணரலாம்.

தொல்காப்பியத்தை யாய்ந்தறிந்த இவர் அதன் கண் மந்திர மென்பதன் இலக்கணத்தை உரைக்கும்,

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானேமந்திர மென்ப"

என்னும் சூத்திரத்தை,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"

என்னும் குறளிற் கோத்து அழகுபடுத்தி யிருக்கின்றார்.

இங்ஙனம் நிரம்பிய நூல் வல்லாராகிய திருவள்ளுவர் பிற புலவர்களிடத்தே நட்புரிமை யுடையவராக இருந்தார். அவர்களோடு பழகுதலை இன்பமாகவும் அவர்களைப் பிரிதலைத் துன்பமாகவும் உணர்ந்தார்.

"உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

என்பதில் இக்கருத்தைக் காண்க. அவர்களுடைய பகை மிகக் கொடிதென்பதை,

"வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை"

என அறிவுறுத்துகின்றார்.

புலவர்மாட்டு இத்தகைய பேரன்பையுடைய இப்பெரியார் அப்புலவர்கள்பால் வறுமை குடிகொண்டிருத்தலை யறிந்து மிக வருந்தி இரங்கினார்.

"பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு"

என்பதில் வறுமையானது அறிவுடையார் அவ்வறிவினையும் மறந்தொழுகச் செய்யுங் கொடுமையை யுடையதென்பதைக் குறிப்பிடுகின்றார். புலவர்கள் இங்ஙனம் இருக்கும் உலகியல்பை,

"இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளியா ராதலும் வேறு"

என்று நொந்து கூறுகின்றார். அத்தகைய புலவர்களையும்,

"இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்று பிரமனுக்குச் சாபங்கொடுக்கின்றார், இவருடைய வெறுப்பு முழுவதும் சேர்ந்து,

"இன்மை யெனவொரு பாவி" என்று வையும் பாட்டில் வெளிப்படுகின்றது.

வறுமையைப் பாவியென்று வைதலைப் போலவே அழுக்காற்றையும் பாவியென வெறுக்கின்றார்.

"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்"

என்று கூறுவது காண்க. இதனால் பொறாமைக் குணத்தையும் இவர் அதிகமாக வெறுத்தாரென்று தெரிகின்றது. உலகத்தினர் ஒருவரை இழித்துரைக்கும் போது "தணிக்கும், பிண்டத்துக்கும் இல்லாமல் நாசமாய்ப் போகவேண்டும்" என்று வைகின்றார்கள். இதே வெறுப்போடு அழுக்காறுடையாரை.

"கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉ
உண்பதூஉ மின்றிக் கெடும்"

என்று அழகிய மொழிகளால் இவர் திட்டுகின்றார்.

ஒழுக்கமில்லான்கண் உயர்வில்லை யென்பதற்கு அழுக்காறுடையான்கண் ஆக்கமில்லாமையை உவமை கூறும் பொழுது இவருக்கு அதன்பாலுள்ள வைரம் நன்கு காணப்படுகின்றது. இது மட்டுமா? அறத்திற்குக் குறைபாடுகள் என்று கூறும் நான்கனுள்,

"அழுக்கா றவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்"

என்று தெரிவிக்கையில் அழுக்காற்றை முதலில் கூறி அதன் இழுக்கை மிகுதிப்படுத்திக் காட்டுகின்றார். சமற்காரமாக நீதியைக் கூறும் இடங்கள் பல திருக்குறளில் உண்டு,

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"

என்பதால் ஒருவன் விருந்தோம்பி வாழ்வானாயினன் அவனே இன்னும் சிறந்த நிலையுடையாருக்கு விருந்தினனாவானென்று கூறு முகத்தால் சுவர்க்கபோகம் அவன் பெறுதல் குறிப்பிக்கப்படு கின்றது.

"கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி"

என்பதில் 'காதில் தொளையிருந்தும் பயனில்லை; மேலே கேள்வி யால் தொளைக்கப்பட்டால்தான் அதுமெய்த்தொளையாகும்" என்று விளக்கும் வாயிலாகக் கேள்வியின் இன்றியமையாமை உணர்த்தப் படுகின்றது.

"கயவர் நன்றறிவாரைக் காட்டிலும் திருவுடையார்" என்று வள்ளுவர் கூறும்பொழுது "இஃது என்ன விபரீதமாக இருக்கின் றதே" என்று வியப்படைகின்றோம். அடுத்து "நெஞ்சத்தில் அவலமிலர்" என்று முடிக்கும்போதுதான் வள்ளுவர் கருத்துப் புலப்படுகின்றது. இவருடைய சமத்காரத்தை வியக்கின்றோம்.

"தேவரனையர் கயவர்" என்று பொய்யில் புலவர் சொல்லும் பொழுது 'தேவரை அலட்சியஞ் செய்கின்றாரா அல்லது கயவரை உயர்த்துகின்றாரா' என்றுயோசனை செய்கின்றோம்; "அவரும் தாம் மேவன செய்தொழுகலான்" என்று காரணம் காட்டும்பொழுது தான்புலவருடைய புலமைத் திறன் மனத்தைக் கவர்கின்றது.

வேத வழக்கொடு இயைந்த பல செய்திகள் திருக்குறளில் உள்ளன. நித்திய நைமித்திகபூசைகள், நான்குஆச்சிரமம், ஐவகைக் கடன்கள், அந்தணர் முதலியோர் ஒழுக்கம், வேதம் முதலிய வற்றைப் பற்றிய செய்திகள் பல வகையில் இணைக்கப்பட்டிருக் கின்றன.

திருமால் உலகளந்த செய்தியும், தாமரைக்கண்ணனாதலும் உணர்த்தப்படுகின்றன. திருமகளும், அவள் தவ்வையும் இணைத் துச் சில இடங்களில் கூறப்படுகின்றனர். "தாமரையாள்" என்று திருமகளை ஓரிடத்திற் குறிக்கின்றார். பிரமதேவனை, 'உலகியற்றி யான்' என்கின்றார். இந்திரனைப் பற்றி இரண்டிடங்களிற் கூறு கின்றார்.

இம்மை, மறுமை, வீடு என்னும் இம் மூன்றும் திருவள்ளுவருக்கு உடன்பாடு. சுவர்க்கத்தைப் புத்தேளுலகமென்றும், மேலுலகமென்றும், வானமென்றும் கூறுவர். தேவரை அவியுணவினன்றோரென்பர். இல்லறஞ் செய்தலின் பயன் சுவர்க்கத்தோடு நிற்கும் என்பதும், துறவறமே வீட்டுக்குக்காரணமெனபதும், இவருடைய கொள்கை யென்று தோற்றுகின்றது. இல்லறம் புரிந்து பின் நெறியாகத் துறவறம் பூணுதலை "ஒழுக்கத்து நீத்தார் பெருமை" என்னும் குறளால் அறிவிக்கின்றார்.

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை" என்று பிறவாமையே தனி வேட்கையாகக் குறிக்கின்றார். மற்றீண்டு வாராநெறி ஒன்று உண்டென்பதும், அது துறவியர்களுக்குரிய தென்பதையும் தெளிவுறுத்துகின்றார்.

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

என்பதில் சுவர்க்க போகத்தினும் உயர்ந்த வீட்டுலக முண்மையும், அது துறவுள்ளத்தினர்க்கே எய்தலாவதென்பதையும் உணர்த்துகின்றார். துறவின் சிறப்பு நோக்கிய "நீத்தார் பெருமை"யைப்பாயிரத்துட் கூறினாரென்று தோன்றுகின்றது.

சுவர்க்கத்தைப் பற்றிச் சொல்லும் இவர் நரகத்தைப் பற்றியும் சில இடங்களில் சொல்லுகின்றார். அதனை "இருள் சேர்ந்த இன்னாவுலகம்" என்றும், "ஆரிருள்" என்றும் "அளறு"என்றுங்குறிக்கின்றனர்.

இல்வாழ்க்கையைப் பற்றி இவர் கூறும் கருத்துக்கள் மிக அரியன; அவற்றின் திரண்ட பொருள் இல்வாழ்பவன் எல்லாவற்றையும் பிறர்க்கு உபகாரம் செய்வதற்கே பயன்படுத்த வேண்டுமென்பதும், அவன் தன் உடலேயும் பிறவற்றையும் பாது காத்தலும், அந் நோக்கத்திற்குத் துணையாக இருத்தல் வேண்டுமென்பதுமேயாம். இங்ஙனம் பிறர்க்குதவுதலே இல்லறத்துக்குச் சிறந்த கொள்கை யென்பதை,

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்பதில் விளக்குகின்றார். தலைமைவகையினால்இல்லறத்திற்குரியது 'தானம்' என்று குறிப்பித்தலும் இதனை வற்புறுத்தும்.

பொருளீட்டுதற் குரிய தொழில்களுள் உழவும் வாணிகமும் தலைமையான. இவற்றில் உழவு மிகச் சிறந்தது. அதனைப்பற்றி இவர் கூறியது ஓரதிகாரமேனும், அதிலுள்ள கருத்துக்கள் ஒரு பெரிய நூலைப்போன்ற சிறப்புடையன.

உழவைப் பற்றிய செய்திகள் பல குறளில் அமைந்துள்ளன. இடும்பையைப் பொருட்படுத்தாமல் முயற்சி புரிபவரை "மடுத்தவா யெல்லாம்" பகடன்னார் என்னும் நடையை "ஏறு போற்பீடு நடை" என்றும் கூறுவனவற்றுள், உழவர்க்குரிய பகட்டின்செய்திகள் வருகின்றன. அரசன் குற்றம் செய்தார்களை ஒறுத்தலுக்குப் பயிர் களையெடுத்தலை உவமை கூறுகின்றார். "இளையதாகமுண் மரங்கொல்க" என்று ஓரிடத்திற் சொல்லுகின்றார். "வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந்தற்று" என்றும் "யாப்பினுள் அட்டியநீர்", ஊரவர் கௌவை யெருவாக வன்னைசொல் நீராக நீளு மிந்நோய் என்றும் கூறுவனவற்றுள் நீர் பாய்ச்சும் தொழிலை உவமைப்படுத்துகின்றார். "தொட்டனைத் தூறு மணற்கேணி" இறைப்பவர்க் கூற்று நீர் போல மிகும்" "குளவளாக் கோடின்றி நீர் நிறைந்தற்று" என்பவற்றில்நீர் நிலைகளைப்பற்றியசெய்திகள் வருகின்றன.

வாணிகத்தைப் பற்றிச் சில குறள்களே காணப்படுகின்றன. ஆயினும் உவமையாகச் சில வாணிக சம்பந்தமான கருத்துக்களை வேறு இடங்களில் அமைக்கின்றார். பெரியாரைத் துணைக்கோடல் என்னும் அதிகாரத்தில்,

"முதலிலார்க் கூதிய மில்லை மதலையாம்
சார்பிலார்க் கில்லை நிலை"

என்றுள்ள குறளில் உவமை முகத்தால் வாணிகக்கருத்தொன்றைக் கூறுகின்றார். தெரிந்து செயல்வகை என்னும் அதிகாரத்தில்,

"ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கா ரறிவுடை யார்"

என்று வாணிகச் சொற்களால் ஒரு குறளை அமைக்கின்றார்.

பின்னும் சமன்செய்து "சீர்தூக்குங்கோல், அளக்குங்கோல், நீட்டியளப்பதோர்கோல்" என அளவு கருவிகளும், "தொடிப் புழுதி கஃசா வுணக்கின்"என நிறுத்தலளவைகளும் கூறப்படுகின்றன. தினைபனை யென்ற அளவுப் பெயர்கள் பல இடங்களில் வரு

கின்றன. சிறுமைக்கு ஓரிடத்தில் எட்பகவைக் கூறுகின்றார். பின்னும் விலங்குகளையும், பறவைகளையும் கைத்தொழிற் பொருள்களையும் குறிக்கின்றார்.

தமிழ் வழக்குகளுள் அகப்பொருட் செய்திகள் காமத்துப் பாலிலும், புறத்துறைகளிற் சில படைச் செருக்கென்னும் அதிகாரத்திலும் உள்ளன.

“தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை”

என்பதிலுள்ள செய்திகள் தமிழ் நூல்களிற் பலவிடங்களிற் காணப்படுகின்றன இக்குறள் கற்பின் உயர்வைத் தெரிவிக்கின்றது. தெய்வத்தைத் தொழாமையும் கணவனைத் தொழுதலுமாகிய இக்கற்பு நெறியை மணிமேகலை ஆசிரியர் மருதி யென்னும் ஒரு தமிழ்நாட்டுப் பெண்ணினது வரலாற்றில் விளக்குகின்றார். காவிரிப் பூம் பட்டினத்திலிருந்த அவள் சிறந்த கற்புடையாளாயினும் தெய்வ விழாவுக்குச் சென்று வழிபடுவதில் கருத்தைச் செலுத்தினதுபற்றி அவள் கற்புக்குச் சிறிது இழுக்கு நேர்ந்தது; அவளை அயலானொருவன் விரும்பித் தொடர்ந்தான். ஆனால் தன் கற்புக் குறைபாடுற்றமை யறிந்து பூதசதுக்கத்திற் போய் அரற்ற அங்குள்ள பூதம் அவள் கற்புக்குக் குறைவு நேர்ந்த காரணத்தை விளக்கிக் கூறியது.

“தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய் யெனப் பெய்யும் பெருமழை” யென்றவப் பொய்யில் புலவன் பொருளுரைதேறாய்; பிசியும் நொடியும் பிறர்வாய்க்கேட்டு விசிபிணி முழவின் விழாக்கோள் விரும்பிக் கடவுட் பேணல் கடவியை யாகலின் மடவரலேவ மழையும் பெய்யாது நிறையுடைப் பெண்டிர் தம்மே போலப் பிறர் நெஞ்சு சுடூஉம் பெற்றியுமில்லை ஆங்கவை யொழிகுவை யாயி னாயிழை ஓங்கிரு வானத்து மழையுநின் மொழியது” என்று அப்பூதம் கூறுவதாக அறைந்த பகுதியில் முற்கூறிய குறட் கருத்து விரிவாகக் காணப்படுவதோடு அக்குறளை மேற்கோளாக அமைந்திருத்தலுங் காண்க.

சிலப்பதிகாரத்திலுள்ள வரலாறு ஒன்றும் முற்கூறியகுறளின் முதற் பகுதியை விளக்குகின்றது. தீக்கனாக் கண்ட கண்ணகியை நோக்கித் தேவந்தி யென்பாள் ‘தீர்த்தத்தில் முழுகிக் காமவேளைக் கைதொழுதால் நலமுண்டாகும்’ என்றாள். அப்பொழுது கண்ணகி, “பீடன் றெனவிருந்த”தாகச் சிலப்பதிகாரம் கூறும் அப் பகுதிக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய ‘அங்ஙனம் துறைமூழ்கித் தெய்வந் தொழுதல் எங்கட் கியல்பன் றென்று சொல்லியிருந்த’ என்ற உரையால் அவள் கூறியதன் காரணம் விளங்குகின்றது.

அகப் பொருட்டுறைகளுள் ஒன்றாகிய, "பிறைதொழு கென்றல்" என்பதாம் இக்கருத்தையே அடிப்படையாகக் கொண்டெழுந்தது. ஒரு தலைவன்பால் அன்பு பூண்ட தலைவி ஒருத்தியை அவள் அங்ஙனம் அன்பு கொண்டமையை அறிய விரும்பும் தோழி, 'கன்னி மகளிர் பிறையைத்தொழுவர் நீயும் தொழுவாயாக' என்று காட்டுவாள். அப்பொழுது தலைவன்பால் அன்பு பூண்ட கற்புடைய தலைவி அங்ஙனம் தொழுதல் தன் கற்பொழுக்கத்திற்குக் குறை வென்றெண்ணித் தொழாள். அதனால் அவளது அன்பு நிலையைத் தோழி உணர்வாள்.

இசைச் செய்திகளாகக் குறளில் உள்ளவை சில. "குழலினிது யாழினிது தென்ப" என்பதில் குழலும் யாழும் சொல்லப்படுகின்றன. குழலின் பின்னர் யாழை வைத்தமுறை அவற்றின் தோற்ற முறையையும் குழலின் பின் யாழ் வாசிக்கப்படும் மரபையும் பின் பற்றியது.

"குழல் வழி நின்றதியாழே" என்பது சிலப்பதிகாரம்.
யாழின்கோடு பயனாற் செவ்விதென்றும், கோவலர் மாலைக்

காலத்தில் குழலூதுவரென்றும் சொல்லுகின்றார்.

"பண்ணென்னாம் பாடற் கியைபின்றேற் கண்ணென்னாம்
கண்ணோட்ட மில்லாத கண்" என்ற விடத்துப் பண்ணுக்

கும் பாட்டுக்கும் இருக்கவேண்டிய இயைபை வற்புறுத்துகின்றார்.

"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று"

என்னுங் குறள் நாடகத்தைப் பற்றியும், அதனைப் பார்க்கப் பெருங் கூட்டம் கூடுவதையும், அது முடிந்தவுடன் அவர்கள் கலைந்து செல்வதையும் தெரிவிக்கின்றது.

"மரப்பாவை நாணாலுயிர் மருட்டி யற்று"
"மரப்பாவை சென்றுவந் தற்று"

என்பவை ஆட்டுவிக்கும் பாவைக் கூத்தை நினைந்து புகன்றவையாகும்.

திருவள்ளுவர் பெயரால் சில வைத்திய நூல்கள் தமிழ் நாட்டில் உலவுகின்றன. இவர் அந்நூல்களை இயற்றவில்லை யென்று ஆராய்ச்சியால் முடிவு கூறலாம். ஆயினும் இவர்கள் மருத்துவத்தைப் பற்றிக் குறளிற் கூறும் உண்மைகள் மக்கள் வாழ்வுக்கு இன்றியமையாதன. மருந்தென்று ஓரதிகாரம் குறளில் இருக்கிறது.

பசித்துண்டலும், அளவாக உண்டலும் தேக சுகத்திற்கு முக்கியமானவை; இக்கருத்தை,

"இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்கும்
கழிபே ரிரையான்க ணோய்"

என்று அழகாகக் கூறியிருக்கிறார்; இதனைக் காட்டிலும் நன்றாகச் சொல்வார் யார்? வேறு அதிகாரங்களில் உள்ள செய்யுள்களாகிய

"செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்"

என்பதில் அளவோடுண்பதையும்,

"உணலினு முண்ட தறலினிது காமம்
புணர்தலி னூட லினிது"

என்பதில் பசித்துண்டலையும் அறிவுறுத்துகின்றார்.

பசித்தபின் அளவறிந்து உண்டலால் நெடுங்காலம் வாழலாமென்பதை மருந்தென்னும் அதிகாரத்தில்,

"அற்றால் அளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு"

என்று உணர்த்துகின்றார். இங்ஙனம் தன் முயற்சியால் உடம்பை நெடிதுய்க்கு மாற்றை ஒருவன் அறிந்திருப்பினும் அவமிருத்யு தோஷத்தால் அவனுயிர் நீங்குமல்லவா? அதனைப் போற்ற வேறொரு வைத்தியம் சொல்லுகின்றார்.

"கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று"

என்பதே அது. இவ்விரண்டு குறளையும் தொடர்பு படுத்திப் பார்க்கும்போது ஒருவன் தன் உடம்பையும் பிறவுயிரின் உடம்பையும் ஒருங்கே பாதுகாத்துவரின் நெடுங்காலம் வாழலாமென்பது இவர் கருத்தாகத் தோற்றுகிறது.

தனக்கும் பிறர்க்கும் ஒருங்கே பயன்பட உணவுண்டு வாழ்ந்து அறம் நடத்துதலைப் பற்றி வரையறுத்த இப்புலவர் பெருமானதுநூல், இவர் தமக்கும் பிறர்க்கும் பயன்படும்படி கற்றறிந்து ஒழுகினரென்பதை நன்றாகத் தெரிவிக்கின்றது. பிறரால் செயற்கரிய செய்தவராகிய இப்பெரியார் புகழ் இன்னும் சிறப்பாக உலகத்தாரெல்லாருடைய உள்ளத்துள்ளும் உளதாகக் காணும் நாள் அண்மையில் இருக்கிறதென்றே நான் நம்புகின்றேன்.

திருக்குறளும் திருவள்ளுவர் புகழும் வாழ்க. (செ—நா.)

உ

சிவமயம்.

# தீண்டாதார் ஆலயப் பிரவேசத் தடை.

(சர்வமதாதீத சுத்தாத்வைத சத்தியதரிசன சித்தாந்த சைவப் பிரசாரகர் சென்னை, திரு, மா. நீலகண்ட சித்தாந்தியார் அவர்கள்.)

உலகமும் பல்லுயிரு மொன்றி நிறைந் தோங்கி
யிலகுஞ் சிவனெம் மிறை.

பிறர் கூற்றை எடுத்துரைத்தல்.

ஆதிகாலந் தொட்டு இப்பாரதகண்டத்திற்றான் தீண்டாமை என்னும் பேய் தாண்டவமாடுகிற தென்றும், இதர தேசங்களில் இத்தீய வழக்கம் கிடையவே கிடையாதென்றும், ஆதலின் இப்பேயைத் துரத்தியடிக்க வேண்டுமென்றும், ஆலயத்துள் தீண்டாதாரெனப்படுவோர் நுழைவதற்கு ஒருவருந் தடைசெய்யலாகாதென்றும், எல்லோரும் கடவுளாற் படைக்கப்பட்டமையின் அனைவரும் அவருக்குப் புத்திரர்களாதலின் அவர் முன்னிலையில் எல்லோருஞ்சமமேயென்றும், அக்காரணம்பற்றி மானுடஜென்மமெடுத்த நாமனைவரும் சகோதரத்துவம் பேணியொழுகாது நம்முள் ஒரு பகுதியினரை மாத்திரம் புறக்கணித்துக் கோயிலுட் புகவிடாமை கொடும் பாதகமே யென்றும், அவ்வாறு புரிதல் ஆண்டவன் திருவுளப் பாங்கிற்கு முழுவிரோத மென்றும், ஆதலின் அவ்வாறு செய்வோரனைவரும் நரகம் புகவேண்டி வருமென்றும், அத்தீண்டாதாரை ஆலயத்துட் புகவிடாவிடில் அங்கே கடவுளுமிரா ரென்றும், ஒவ்வொருவருங் கடவுளம்சமாதலின் ஒருவரை விடாவிடின் கடவுளையே தடைசெய்தது போலாமென்றும், பண்டைக் காலத்துப் பாமரர்கள் யாரோ குருட்டுத்தனமாய் ஏற்படுத்திய கபோதிக் கதையாகிய கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்துப்பழைய வழக்கம் பழைய வழக்கமென ஊறிக்கொண்டு நவீன நாகரீக மிக்குற்ற இக்காலத்தும் பிடிவாதஞ் செய்வோர் மூடர்களேயெனவும், ஆதலின் மூடர்களுக்குப் புத்தி புகட்டும் பொருட்டுக் கோயிலின் வாயிலில் உண்ணாவிரதம் பூண்டு சத்தியாக்கிரகஞ் செய்து உட்புகுதல் வேண்டுமென்றும், அவ்வாறு செயின் அந்நிய அரசாங்கந் தலையிட்டுச் சத்தியாக்கிரகஞ் செய்வோரைக் கலகக்காரர்களென அப்புறப்படுத்துகின்றனராதலின், சட்டசபையிலேயே "தீண்டாதாராலயத்துட் புக அநுமதியாதவரைத் தண்டிக்குமாறு ஓர் புதிய சட்டம் வெகு துரிதமாக இயற்றல் வேண்டுமென்றும் தீண்டாதாரைச் சண்டாளர், பறையர், புலையர், சக்கிலிகள், தோட்டிகள், மாலவாள்ளு, மாதிகா, அவர்ணர், தீயர், நாயாடி, நாமசூத்திரர் எனப் பலவாறாக இழித்துக் கூறி அவரிடத்திற் சமத்துவம், சகோதரத்துவம்

பாராட்டாது, தீண்டாமையே வெகுவாகப் பாராட்டி அவர்களைச் சேரியி லோர் புறமாக வொதுக்கிவைக்கும்வரையிற் சுயராஜ்யமுஞ் சுதந்திரத்துவ மும், பகற்கனவும் முயற்கொம்புமாய் முடியுமெனவும், நந்தனாரா தியரைக் கோயிலுள் விடவில்லையாயென்றும்" இன்னோரன்ன பிறவற்றையுங் காந்தி யவர்களும் அவரைப் பின் பற்றும் பல்வகைப்பட்ட குழுவினரும் பகர்கின் றனர். மதவிஷயத்திற் பற்றுடைய மாளவியாவும் அவ்வாறே உறுதியாகக் கூறுகின்றனரென்றும், விவேகானந்தரும் ஜாதிபேதம் பாராட்டாது அமெ ரிக்காவில் ஆர்யமதப் பிரசாரஞ் செய்து அறிவின்மிக்க அமெரிக்கரும் அங்கீகரிக்குமாறு செய்தனரென்றும், ராமகிருஷ்ண பரமஹம்சரும் பிரம்ம சமாஜத்தாரும், ஆரியசமாஜத்தாரும அவ்வாறேயென்றும் இவர்களனைவரும் சீர்திருத்தக்காரர்களாதலின் ஏனையோரும் அவர்களைப் பின்பற்றி மதசீர் திருத்தமும் சமூகசீர்திருத்தமும்செய்தல் வேண்டுமென்றும் பல்லாற்றானும் பறையறைகின்றனர்.

அஃதன்றியும் "33 கோடி இந்துக்களில் 4 கோடியினராகிய அத் தீண்டாதாரை நாம் ஒதுக்கி வைத்தால் அவர்கள் கிறிஸ்தவ பௌத்த மகம்மதிய மதங்களில் நாளுக்கு நாள் சேர்ந்து விடுகின்றனர். பிறகு நம்மிந்துக்களுடைய தொகை குறைந்து பலஹீனமடைகிறது. முதலில் தீண்டப்படாதாராயிருந்தோர் இதர மதப்பிரவேசம் செய்தான பின்னர் கைகுலுக்கி அவர்களைத் தீண்டிக்கொள்ளுகிறோம். இது மதியீனந்தானே" என்பரோர்சாரார். ஆலயத்துள் ஆடு, மாடு,நாய்நுழையவில்லையா? மனிதன் அவைகளை விடகீழ்ப்பட்டவனா? என்பர் மற்றோர் சாரார். அதோடமை யாது விக்ரகங்களின் தலையில் எலி ஏறவில்லையா? என்பர் பிறிதோர்சாரார். அது மட்டுமா! ஐயோ, சமபந்திபோஜனஞ் செய்யவேண்டுமென்பர் இன் னுமோர் சாரார். (சமபந்தி போஜனமும் சில விடங்களில் நடந்தும் விட் டது). அதோடமையாது அத்தீண்டாதாரோடு கலப்பு விவாகமும் நடை பெற வேண்டுமென்பர் கடைச்சாரார்.

சமாதானம்.

அன்னாரனைவருக்கும் பலவகைச் சமாதானங்களைக் கரதலாமலகம் போலெடுத் தெடுத்துப்புகட்டினும் உத்தமர்களையும் உத்தம மார்க்கத்தினை யும், "எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு" என்னும் பொய்யாமொழியினர் கட்டளையையும் சிரமேற்றாங்காது தூஷிப்பதே பூஷணமாகக் கொண்ட பிடிவாதக்காரர்க ளாதலின் சாதுக்கள் சந்தோஷிக்குமாறு ஒவ்வோர் விஷயத்தினையும் பூர்வ பட்சமாக நிறுத்திக்கண்டித்து எமது சித்தாந்தத்தினை யெடுத்துரைக்கப் புகுகின்றோம். சித்தாந்த சமாதானத்துடன் ஆதியோடந்தம் ஆழ்ந்தாராய்வா ராக. பிறகு "யார் மூடர்கள் யார் விசால நோக்குடையவர்கள் யார் மூற் போக்காளர்கள்" என்பதை அறிஞர்கள் அறிந்துகொள்வாராக.

"ஆட்டுக்குட்டியும் ஓநாயும்" என்ற கதைக் கிணங்க ஆக்கிரமடையா திருப்பாராக. வைத்தியமோ, நீதிச்சட்டமோ, வர்த்தகமோ, இயந்திரவியற்றலோ, விவசாயமோ, உயிர் நூற்புலமையோ, ககோளபூகோள சாத்திர விற்பன்னமோ இன்னும் கூற கலைஞானமோ பிறவோ இவற்றுளேதேனு மொன்றிற் றேர்ச்சிபெற விரும்புவோர் அற்றுறையின் மிக்காரை யடுத்து விஷயத்தினைச் சந்தேக விபரீத மயக்கமறக் கற்றுத் தேர்ந்தன்றோ வெளியிற் றலை காட்டல் மரபு? அறையிலாடியன்றோ அம்பலத்தாடல் வேண்டும்! அதைவிட்டு ஈண்டுக் காட்டப்பட்டவை யனைத்தும் பெரும்பாலும் அழிதன் மாலையவாய உடலோம்பற் பொருட்டுப் போதிக்கும் நூல்களாதலின், சிறப்பாக என்று மழியா ஆன்ம லாபம் பெறும் பொருட்டும் பொதுவாக உடலோம்பற் பொருட்டும் ஆயுள் காலபரியந்தம் ஆன்றோர்களை யடுத்து அறிதற்பாலதாய மகத்தான மதவிஷய நூல்களை நன்குஆராயாமலே முழுச் சோம்பேறிகளாய் விளையாட்டுச் சிறுவர்போல் "கொடிறும் பேதையுங் கொண்டது விடாது" என்பதுபோல் விதண்டாவாதம் பேசுமவர்க்கியா மென்னென் றெடுத்துரைப்பது?

அம்மம்ம அது பெருங் கஷ்டமே!

மேலும் அன்னார் "வைதீகப் பித்த மூடர்களுக்கென்ன தெரியும். நாம் கலாசாலைகளிற் பதினைந்தாண்டு பயின்று பட்டம் பெற்றுப் பின்னும் பல்வகைப்பட்ட பரீட்சையினுந் தேர்ந்துள்ளோம். நாலாயிரம் ஐயாயிரம் சம்பாதிக்கின்றோம். வைதீகர் பத்து ரூபாயேனும் சம்பாதிக்க வழியற்றிருக்கின்றனர்" என இறுமாப்புறுகின்றனர்.

ஆனால் ஆரிய மத விஷயத்தினை நூறாண்டு ஆராய்ச்சி செய்யினும் இன்னும் அரிய பெரிய விஷயங்கள், அநேக பிறவிகளிற் "கோடி ஜன்மார்ஜிதை: புண்யைஸ்ஸிவேபக்தி: ப்ரஜாயதே" என்று சிவகீதை செப்பியது போன்றும், "பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சிக்கில் நல்லறிவு சற்றே நகும்" என்று ஔவைப்பிராட்டியார் தம் ஞானக் குறளிற் றெரித்தாங்கும் புண்ணியப் பேற்றினாலேயே அறியவேண்டியதொன்றுமாதலின், ஒன்றும் ஆராயாமலே தான்றோன்றித் தம்பிரான் மார்களாய் மனம்போனபடியெல்லாம் பிதற்றும் பித்தர்களிவர்களே யென்பதனைத் தெளிவாய் எடுத்துக்காட்டுவோம். "முற்றுமுணர்ந்தவரில்லை முழுவதூஉங் கற்றனமென்று களியற்க" "கற்றது கைம்மண்ணளவு கல்லாதுலகளவு", "தொட்டனைத் தூறுமணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறு மறிவு" "தான் கற்றநூலளவேயாகுமாம் நுண்ணறிவு", என்னுமான்றோர் வாக்கியங்களைக் கடைப்பிடிப்பாராக.

பர சிவாஞ்ஞையாகிய வேதாகமாதிகட்குப் பயந்து கூடியவரையில் தம் சத்தியநுசாரம் அவற்றின் விதிவிலக்குப்படி யொழுகுபவரை வைதீகப் பித்தர், மூடர் எனத் தூஷிக்கின்றனராதலால் அவர்கள் அவ்வைதீகரைத் தமக்குத் தெரியாமலேஉயர்த்திக் கூறிவிட்டமை கீழ்க்கண்டவற்றால் நன்கு ஸ்தாபிக்கப்படும். அதாவது வித் என்னுந் தாதுவிற்கு ஞானம் என்பது பொருள். ஞானவிஷயத்தினைப் போதிப்பது வேதம். எனவே, வைதீகர் என்றால் ஞானவிளக்க வேதத்தினைப் பின்பற்றுவோர் என்பது திரண்ட பொருள். வைதீகப் பித்தர் என்றால் ஞான விஷயத்தில் பித்தமேறினவர் என்பது பெறப்பட்டு அவர்களைத் தூஷிப்போர் அவைதிகப் பித்தர், அதாவது அஞ்ஞான விஷயத்தில் பித்தமேறின பாஷாண்டிகளாகிய முழு மூடர் என்பது தானே போதரும். ஆகவே, இவர்கள் நினைப்பதொன்றும் பிதற்றுவது மற்றொன்றுமாய் முடிதல் காண்க. "கற்றவரை யொருநாளும் பழிக்க வேண்டாம்" என நீதி பிறந்திருப்பதையுங் கற்காமல் ஞான விஷயத்தினைக் கற்கும் பெரியோர்களை ஏனோ தூஷித்துப் பாவ மூட்டை கட்டிக்கொண்டுநரகலோக யாத்திரை செய்யவேண்டும்? அந்தோ கலியின் கொடுமை!

நீண்டாமை பாதகண்டத்தின் மாத்திரமன்று உலகமுழுவதுமுளது என்பது.

அநுவாத பூர்வபட்சம்:— "ஆதிகாலந் தொட்டு இப்பரத கண்டத்தின் மாத்திரமே நீண்டாமை என்னும் பேய் பிடித்தாட்டுகிறது. அதைத் தூரத்தியடிக்க வேண்டும்"

சித்தாந்தம்:— நம் பரதகண்டத்தின் மாத்திரமன்று.

உலக முழுவதுமே நீண்டாமையுளது. சுருதி, யுக்தி, அநுபவம் என்னும் பிரமாணத்திரயத்துள் அநுபவத்திற்கும் யுக்திக்கும் எட்டா விடயத்திற்கன்றோ சுருதியைத் தேடல் வேண்டும். மேலும் இக்காலத்தினர் பெரும்பாலும் சுருதி தம் புத்திக் கெட்டாத சுருங்கியமதியினராதலினாலும் காட்சியளவையெனும் பிரத்தியட்சப் பிரமாணமாகிய அநுபவமொன்றனையே முக்கியமாய்க் கைக்கொள்வோராதலினாலும் இவ்விஷயத்தினைத் தாபிக்க நூலளவை அதாவது சுருதிப் பிரமாணத்தை ஈண்டு யாந் தேடேம். பிரத்தியட்ச விஷயத்தினைக் (Practical knowledge) கொண்டே நிலை நிறுத்துகின்றேம். முதலாவது ஐந்தாம் ஜார்ஜ் மன்னராகிய ஆங்கிலேய சக்கரவர்த்தியினையே உதாரணமாக எடுத்துக் கொள்வோம். அவிருக்குச் சுமார் இருபது மந்திரிகளுளர். அவ்வமைச்சருள் எவரேனும் அன்றிப் பிரதானியேனும் மன்னரைக் காணவேண்டியிருப்பின் அதற்கேற்ப ஓர் காலம் வரையறுக்கப்பட்டு அக்காலத்தில் மன்னர் பேட்டியளிக்கின்றனர் எனப் பன்முறையும் பத்திரிகையிற் காண்கின்றோம்.

(தொடரும்)